Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | பங்குனி-23 | 05-04-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை 46


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M. சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247

# மங்களவிடமிருந்து "லேக்ஹவுஸ்" பறிபோகிறது

# புதிய நிர்வாகியாக நிதியமைச்சர் அமுனுகம

## சனாதிபதி செயலகத்திலிருந்து சிறப்பாணை

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மிக நம்பிக்கைக்குரிய வராக விளங்கிய மங்களசமரவீர விடமிருந்த மேலும் ஒரு பொறுப்பை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பறித்து நிதிஅமைச்சர் சரத்அமுனுகமவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அரச பத்திரிகை நிறுவனமான லேக்ஹவுஸ் நிறுவனமே நிதியமைச்சர் சரத் அமுனுகமவின் பொறுப்பில் விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது இது குறித்து சனாதிபதி செயலகத்தால் சிறப்பாணை வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.**

ஊடகத்துறை அமைச்சரான மங்கள சமரவீரவின் கட்டுப்பாட்டின் கீழ் இதுவரை இயங்கிவந்த லேக்ஹவுஸ் நிர்வாகம் சரத் அமுனுகம வசம்வரவுள்ளது. மங்கள சமரவீரவை அண்மைக்காலமாகவே சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா ஒதுக்கி வருகிறார். அண்மையில் மங்கள சமரவீர வெளிநாடு சென்றிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சனாதிபதி சந்திரிகா, ஊடகத்துறையை நிர்வகிக்க சிறப்புக்குழு ஒன்றை அமைத்து அதில் சில துணை அமைச்சர்களை இடம்பெறச் செய்திருந்தார். ரூபவாஹினிக்கும் சமரவீரவுக்கும் (12ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரணதர பெறுபேறு நாளை வெளிவரும்

### -பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் நாளை புதன்கிழமை வெளியிடப்படவுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மகிந்த விஜயசிறி கூறியுள்ளார்.

பரீட்சைப்பெறுபேறுகளை வெளியிடுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாகவும், அன்றைய தினம் நண்பகல் முதல் இணையத் தள மூடாகவும் பரீட்சைப்பெறுபேறுகளை அறிந்து கொள்ளலாம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

க.பொ.த.சா.தாரணதரப் பரீட்சை பெறுபேற்றை பார்வையிட விரும்புவோர். www.doenets.lkஎனும் இணையத்தள முகவரியில் பார்வை யிடலாம் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## தற்காலிகக் குடியிருப்புக்களை நோர்வேப் பிரதிநிதி பார்வையிட்டார்

(கிளிநொச்சி)

நோர்வே நாட்டின் நிதிப்பங்களிப்புடன் தமி ழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வடமராட்சி கிழக்கில் அமைக்கப்பட்ட தற்காலிகக் குடிமனை களைக் கொண்ட குடியிருப்புக்களை நோர்வேத் தூதரகப் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

முகமாலையூடாக வருகைதந்த கொழும்பு நோர் வேத் தூதரக இரண்டாம் நிலை அதிகாரியான கிறிஸ்ரின் லூண்டன், அவருடன் கூட வந்த நித்தியா பெரேரா ஆகியோரை தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன் கிறிஸ்ரி வரவேற்று வடமராட்சிக் கிழக்கிற்கு அழைத்துச் சென்றார். முதற் கட்டமாக நேற்று வடமராட்சி கிழக்கு நெல்லியான் என்னும் இடத்திலுள்ள படகுக் கட்டுமானத் தளத்தில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் (12ஆம் பக்கம் பார்க்க)

## கடற்றொழில் உபகரணங்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டன

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் தமது தொழில் உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு நேற்று வடமராட்சி கிழக்கில் ஒரு தொகுதி கடற் றொழில் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மீண்டும் தொழிலுக்கு செல்லுதல் எனும் கருப்பொருளின்கீழ் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்சித்திட்டத்தின்படி சுனாமி அனர்த்தத்தின்போது தமது தொழில் உபகரணங்களை இழந்த மீனவர்களில் 35பேருக்கு மீன்பிடிப் படகுகளும் வலைகளும் வழங்கப்பட்டன.

ஜேர்மன்,நோர்வே நாடுகளின் நிதிப்பங் களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒருங்கிணைந்த இவ்வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இப்படகுகள் உள்ளூர்ப் படகு (12ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசரின் இறுதிச்சடங்கு தினம் யாழில் துக்கதினமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இறுதிச்சடங்குகள் இடம்பெறும் தினமன்று யாழ். குடாநாடெங்கும் துக்கதினம கடைப்பிடிக்கப்படவுள்ளது.யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியம் மற்றும் யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை என்பன இத் துக்கதின அனுஷ்டிப்பிற்கான அழைப்பினை விடுத்துள்ளன.

இதன் போது யாழ். குடாநாடெங்கிலும் உள்ள வீடுகள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், வீதிகள் மற்றும் வாகனங்கள் என பொது இடங்கள் பலவற்றிலும் கறுப்புக் கொடிகட்டி சோககீதம் இசைக்க விடப்படும்.மக்களின் இயல்பான செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் இந்தத் துக்கதினம் கடைப்பிடிக்கப்படுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (33)

## இந்தியா–சிறிலங்கா இராணுவ ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்பே இல்லை–வைகோ

(சென்னை)

இந்தியாவிற்கும், சிறிலங்காவிற்கும் இடையேயான இராணுவ ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்பேயில்லை என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

நெல்லையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். புதுடில்லியில் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்த போது, இந்த ஒப்பந்தம் தொடர்பாக இந்திய அரசு எவ்வித இறுதி முடிவும் எடுக்கவில்லை என்று கூறியதாக வைகோ தெரிவித்தார். முன்னதாக மார்ச் 28 ஆம் திகதியன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, சிறிலங்காவுடன் எவ்வித இராணுவ ஒப்பந்தமும் ஏற்படாது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தன்னிடம் தெரிவித்ததாகக் கூறினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (32)

## தொழிற்பயிற்சி அமைச்சுப் பணிப்பாளர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

இந்து சமய விவகாரம் மற்றும் கிழக்கு தொழிற் பயிற்சி அமைச்சின் தொழில் பயிற்சிப் பிரிவுப் பணிப்பாளர் தி.கைலைநாதன் நேற்று நண்பகல் மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பின் மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அவர் வந்தபோது இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது. தொழில்நுட்பக் கல்லூரி உப அதிபர் (12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் அரசுக்கெதிராக திங்கள் மாபெரும் பேரணி

(வவுனியா)

சிறிலங்கா அரசாங்கம் சமாதான முன்னெடுப்பை துரிதப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து எதிர்வரும் திங்கட்கிழமை வவுனியாவில் மாபெரும் எழுச்சி ஊர்வலம் நடைபெறவுள்ளது.

வைரவபுளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமை இரவுநடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக மாவட்ட வெகுசன ஒன்றியங்களில் தலைவர் சதாசிவம் குலதேவராசா தெரிவித்தார். மாவட்ட வெகுசன அமைப்புக்களுடைய ஒன்றியம் இப்பேரணிக்கான முழு ஏற்பாடுகளையும் மேற்கொள்கிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொண்டராசிரியர் மாபெரும் பேரணி!

(புதுக்குடியிருப்பு)

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி முல்லை வலய தொண்டர் ஆசிரியர்கள் நேற்றுப் புதுக்குடியிருப்பில் மாபெரும் பேரணி ஒன்றை நடத்தி உள்ளனர்.

கடந்த மூன்று வருடங்களாகத் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கவேண்டும். கஷ்ரப்பிரதேசம், அதிகஷ்ரப்பிரதேசம் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் நியமனம் வழங்க வேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தே இவ் ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெற்றது.

காலை 10.30 மணியளவில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி நகரிலிருந்து 1 1/2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளதும், திருவையாறு முதலாம் பகுதியில் உள்ளதுமான தென்னை, மா,பலா போன்ற பயன்தரு மரங்கள் அடங்கிய இரண்டு ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்துக்கொடுக்கப்படும். தொடர்பு:- T.P 077 316 4615 (5957)

### தவறிவிட்டது

மார்சல் ஸ்ரீபன் ரஜீதா மாணிக் கபுரம் விசுவமடு எனது தேசிய அடையாள அட்டை 837203759V கிளிநொச்சியில் வைத்துக் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை,கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். தகவல்:- ரஜிதா. (5969)

## சுனாமித் தாக்கத்தினால் இழந்த ஆவணங்களை மீளப்பெறல்

சுனாமித் தாக்கத்தின்போது பயண அனுமதி,குடும்ப அட்டை, தமிழீழ மோட்டார், ஊர்தி ஆகிய ஆவணங்களை இழந்தவர்களின் நன்மை கருதி போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு முல்லைத்தீவு பிரதேச செயலகத்தில் 06.04.2005 ஆம் திகதியும், மருதங்கேணிப் பிரதேச செயலகத்தில் 08.04.2005 ஆம் திகதியும், விசேட செயலகங்கள் இயங்க உள்ளதால் ஆவணங்களை இழந்தோர் குறிப்பிட்ட செயலகங்களில் குறிப்பிட்ட திகதிகளில் சென்று காலை9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை தங்களது ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுமாறு போக்குவரத்துக் கண் காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர். (சி-11622)

## கிளிநொச்சி நகரில் அலுவலகத் தேவைக்காகக் கட்டடம்

*கிளிநொச்சி நகரில் அரச நிதி நிறுவனம் ஒன்றின் அலுவ லகத் தேவைகக்காக, கீழ்த்தரப்படும் விதி முறைகளுக்கு அமைவான ஒரு கட்டடம் உடனடியாகத் தேவைப்படுகின்றது.*

(1) 2400 சதுர அடிக்கு மேற்பட்ட தளப்பரப்பினைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

(2) கட்டடம் A9வீதியை முகப்பாகக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது

(3) போக்குவரத்திற்கு இடையூறு இன்றி வாகனங்கள் தரித்து நிற்க போதிய இடவசதி இருத்தல் அவசியம்.

(4) கட்டடம் உறுதியானதாகவும், சிமெந்தினால் ஆனகூரையினைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(5) இரண்டு கழிப்பறைகள் கொண்டதாகவும் சீரான வடிகால் அமைப்புகள் உள்ளதாகவும் இருத்தல் அவசியம்.

(6) போதிய நீர் வசதியிருந்தல் வேண்டும்.

(7) கட்டடம் காற்றோட்ட வசதி, சுகாதார முறைகள் பேணப்படும் சுற்றாடலைக் கொண்டதாகவும் இருத்தல்வேண்டும்..

மேற்கூறப்பட்ட வசதிகளுடன் உள்ள கட்டடத்தை வாடகைக்கு விட விரும்பும் உரிமையாளர்கள், மாதாந்த வாடகை மற்றும் விபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு 15.04.2005இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப் படுகின்றார்கள்.

மே/பா,
ஈழநாதம்,
யாழ்ப்பாணம்.

(சி-11623)

## துயர் பகிர்வோம்

### அமரர் செபஸ்தியாம்பிள்ளை யோசேப் இராசதுரை

எமது பணிமனையின் நிதிக்கிளையில் எழுதுநராகக் கடமையாற்றும் திரு.இ.சத்திய சீலன் அவர்களின் பாசமிகு தந்தையார் அமரர் செபஸ்தியாம்பிள்ளை யோசேவ் இராசதுரை அவர்களின் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன், ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

வலயக்கல்விப்பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள்,
வலயக்கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு.

(5919)

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு,
வடக்கு–கிழக்கு மாகாண சபை.

வடக்கு–கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்
(நிகொட்)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல.1846–SRI (SF)

## கேள்வி கோரல் – இல 32

## பாடசாலை மரத்தளபாடங்கள் கொள்வனவு

01 வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பாடசாலை மரத்தளபாடங்களைக்கொள்வனவு செய்வதற்கு இக்கடனில் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் (NECORD)கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.

| தொடர் இல. | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் | கூறுவிலைப் பிணைப்பணம் |
|---|---|---|---|
| 01 | யாழ்/கார்ப்/ஈடி/23 | 2,000/= | 84,000/= |
| 02 | கிளி/கார்ப்/ஈடி/14 | 2,000/= | 50,000/= |
| 03 | முல்/கார்ப்/ஈடி/30 | 2,000/= | 50,000/= |
| 04 | மன்/கார்ப்/ஈடி/29 | 2,000/= | 80,000/= |
| 05 | வவு/கார்ப்/ஈடி/22 | 2,000/= | 56,000/= |
| 06 | திரு/கார்ப்/ஈடி/33 | 2,000/= | 75,000/= |
| 07 | மட்/கார்ப்/ஈடி/36 | 2,000/= | 87,000/= |
| 08 | அம்/கார்ப்/ஈடி/41 | 2,000/= | 120,000/= |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்விகள் கோருவதற்குத் தகுதிவாய்ந்தவர்களாவார்கள்.

i கடந்த ஐந்துவருடங்களினுள் ஆகக்குறைந்தது. ஒரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தத்தை ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான கேள்வி கோருபவர் திருப்திகரமாக முடித்திருக்க வேண்டும். போதியளவு தொகையிலான பாடசாலை மரத்தளபாடங்களை உற்பத்தி செய்யும் ஒருதச்சுவேலை அல்லது வில் காய்ச்சியொட்டுதல் வேலைத்தளத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராக இருக்க வேண்டும் என்பதுடன் கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பதை நிரூபிப்பதற்கான சான்றிதழைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

ii ஒப்பந்தத்தைக் கையாள்வதற்கு கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் தொழிற்படுத்தல் மூலதனம் உள்ளதென நிரூபிப்பதற்குக் கேள்விதாரருக்கு இயலுமானதாக இருக்க வேண்டும். இதற்கு மாற்றீடாகக் கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் கொண்ட தொகையொன்றுக்கு இலங்கையில் உள்ள மதிப்பு வாய்ந்த வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற கடன் வழங்கப்படும் என உத்தரவாதம் பெற்ற கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்தகைய கடன் சான்றானது திட்டப்பணிப்பாளருக்கு விலாசமிடப்பட்ட கடிதம் என்ற அமைப்பில் இருக்க வேண்டும் என்பதுடன் கேள்வி கோருபவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால் மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு பிரத்தியேகமாக இக்கடனை வழங்கும் என அக்கடிதத்தில் தெளிவாகக் காட்டப்படவேண்டும்.

iii மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

04 மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு கேள்வி கோரலாம். ஆனால் இத்திட்டத்தின் கீழ் பாடசாலைத் தளபாடங்களை வழங்குவதற்கு நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தம் உட்பட இரண்டு ஒப்பந்தத்துக்குக் கூடுதலான ஒப்பந்தத்தைப் பெறத் தகுதியற்றவராவார்.

05 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களைக் கேள்விப் படிவத்திலிருந்து பெற முடியும் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (NECORD),55,கந்தசாமி கோவில் வீதி,திருகோணமலை என்ற விலாசத்திலுள்ள திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல:- 026 222 7434.தொலை நகரி:-026222 7401.மின்னஞ்சல்:- necord @sltnet.lk

06 கேள்வி ஆவணங்களை 2005 ஏப்ரல் 4 ஆம் திகதியில் இருந்து 2005 ஏப்ரல் 18 ஆம் திகதி வரை காலை 9.30 இல் இருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்தில் இருந்து இது தொடர்பாக பந்தி 2 இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07 அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் தலைவர், கருத்திட்ட கேள்விச்சபை நிகொட் ,இல: 55 ,கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் குறிப்பிட்ட பிணைப் பணம் அடங்கலாக 2005 ஏப்ரல் 29 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அந்த நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

08 கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு 1 வாசகம் 11 இல் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணத்தில் இது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

09 சகல கூறுவிலைகளும் இதன் தொடர்பாக பந்தி 2 இல் உள்ள அட்டவணையின் பிரகாரம் கூறுவிலைப் பிணைப்பணத்துடன் இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

10 கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

11 உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் ஒவ்வொரு வகையான மரத்தளபாடங்களின் மாதிரிகளைத் தகுதிவாய்ந்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் செவ்வை பார்ப்பதன் பொருட்டு சமர்ப்பிக்கவேண்டும்..

த.லங்காநேசன்
தலைவர்,
திட்டப்பணிப்பாளர்,
வடக்குக் கிழக்கு சமுதாய மீளமைப்பு
அபிவிருத்தித் திட்டம் (நிகொட்),
திருகோணமலை.

(சி-11620)

# போப்பாண்டவருக்கு 20 இலட்சம் பேர் அஞ்சலி

# வெள்ளிக்கிழமை நல்லடக்கம் செய்ய முடிவு

(வத்திக்கான்)

**போப்பாண்டவர் உடல் மீது நேற்று முன்தினம் புனிதத்தீர்த்தம் தெளிக்கப்பட்டு இறுதிப் பிரார்த்தனை படிக்கப்பட்டது. அவரது ஆத்மா சாந்தி அடைவதற்காக வத்திக்கானிலுள்ள புனித பீட்டர் சதுக்கத்தில் திருப்பலிப் பிரார்த்தனை நடந்தது. இதில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர். அவரின் இறுதிச் சடங்குகள் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**


போப்பாண்டவரின் இறுதிச் சடங்குகளைச் செய்யவும், புதிய போப்பாண்டவர் தேர்ந்து எடுக்கப்படும் வரை பொறுப்புகளை நிறைவேற்றவும், தற்காலிக கத்தோலிக்கத் தலைவராக கர்தினால் எட்வர்டோ மார்டினாஸ் சமாலோ நியமிக்கப்பட்டுள்ளார் அவர் உத்தரவின் பேரில் போப்பாண்டவரின் உடல் நறுமணப் பொருட்களால் பதப்படுத்தப்பட்டது இதையடுத்து போப்பாண்டவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவது தொடங்கியுள்ளது.

போப் உடலுக்கு முதலில் கத்தோலிக்கக் குருமார்கள் கர்தினால்கள் இத்தாலிப் பிரதமர் சில்வியோ பெர்லூஸ் கோனி ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள். நேற்றுப் பிற்பகல் போப்பாண்டவரின் உடல் அப்போஸ்தல அரண்மனையில் இருந்து புனித பீட்டர் சதுக்கத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு உலகத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

போப் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த உலகத்தலைவர்கள் வத்திக்கானுக்கு சென்ற வண்ணம் உள்ளனர்.

போப்பாண்டவரின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். அப்போது லட்சக்கணக்கான கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். அஞ்சலி செலுத்துவார்கள். போப் பாண்டவரின் நல்லடக்கத்தை எப்போது நடத்துவது என்பதை முடிவு செய்ய நேற்றுக் காலை 10 மணிக்கு கர்தினால்களின் கூட்டம் நடந்தது. அதில் வெள்ளிக்கிழமை போப் நல்லடகத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அன்று நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக உலகம் முழுவதிலும் இருந்து 20 லட்சம் பேர் வத்திக்கானில் திரள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் உட்பட ஏராளமான நாடுகளின் தலைவர்கள் போப் நல்லடக்க நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளனர். அவர்கள் தங்குவதற்கான இடவசதி மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை இத்தாலிய நாட்டு அரசு செய்து வருகிறது.



போப் மறைவையடுத்து அமெரிக்காவில் உள்ள வெள்ளை மாளிகையில் அமெரிக்கக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.


## ஈரானில் நிலநடுக்கம் 15 பேர் படுகாயமடைந்தனர்


(தெஹ்ரான்)


ஈரானில் நேற்று முன்தினம் அதிகாலை, ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 15 பேர் காயமடைந்தனர்.


ஈரானில் உள்ள கெர்மான் மாகாணத்தில் ராவர் நகரில் அதிகாலை இந்திய நேரப்படி 3.54 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் கருவியில் 4.1 ஆக நிலநடுக்கம் பதிவாகியிருந்தது.

# போப்பாண்டவரின் அஞ்சலி நிகழ்வில்...









## ஜப்பானின் ஹிரோஷிமா நாகசாகியில் போப்பாண்டவருக்கு மக்கள் அஞ்சலி

(டோக்கியோ)

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களை அணு குண்டுகளை வீசி அழித்தது அமெரிக்கா.

அந்நகர மக்கள் போப்பாண்டவரின் மறைவுக்கு ஞாயிற்றுக்கிழமை கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

உலக அமைதிக்காக குரல் கொடுப்பதற்காக இந்த இரு நகரங்களுக்கும் 1981 இல் வந்து ஆசி வழங்கினார் போப்பாண்டவர்.

ஹிரோஷிமா நகர மேயர் தடாடோஷி/பகாஸாகி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், 'ஜப்பான் மீது அணுகுண்டு வீசியதில் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. எனவே,அதனால் ஏற்பட்ட பின்விளைவுகளை உலக மக்கள் நினைவில் கொண்டு அணுகுண்டுத் தாக்குதலைத் தவிர்க்க வேண்டும் என்ற போப் பாண்டவரின் வேண்டுகோளை அனைவரும் ஏற்போமாக என்று கூறியுள்ளார்.

அமெரிக்காவும்,சோவியத்யூனியனும் ஏவுகணைப் போட்டியில் இறங்கியிருந்த நேரத்தில் ஜப்பானுக்கு விஜயம் செய்தார் போப்பாண்டவர்.



யப்பானில் ஆர்ச்சி எக்ஸ்போ 2005 என்ற கண்காட்சி நடைபெறுமிடத்தில் பார்வையாளர் பகுதியிலுள்ள அனுதாபக் குறிப்புப்புத்தகத்தில் பாப்பரசரின் மறைவை யொட்டித் தனது அனுதாபச் செய்தியை எழுதும் யப்பானியர் ஒருவர்.

# உலகத் தலைவர்கள் பலரும் போப்பிற்கு கண்ணீர் அஞ்சலி

(பரிஸ்)

போப்பாண்டவர் மறைவுக்கு உலகத் தலைவர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். போப்பாண்டவர் இரண்டாம் ஜோன்போல் மறைவுக்கு உலகத் தலைவர்ககள் பலர் கண்ணீர் அஞ்சலி செலுத்தி இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்கள். இங்கிலாந்து பிரதமர் டோனிபிளேயர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

உண்மைக்குப் போராடியவர் கத்தோலிக்க மற்றும் கத்தோலிக்கர். அல்லாது கிறிஸ்தவ மக்களாலும் போற்றப்பட்டவர் போப்பாண்டவர். ஒரு உண்மையான தலைவரை உலகம் இழந்து விட்டது. எது உண்மை, நியாயம் என்பதை அவர் நம்பினாரோ அதை நிலைநாட்டப் போப்பாண்டவர் சளைக்காமல் போராடினார். மதநம்பிக்கை உள்ளவர்களும், மத நம்பிக்கை இல்லாதவர்களும் போப்பாண்டவரை பெரிதும் நேசித்தார்கள். இவ்வாறு இங்கிலாந்துப் பிரதமர் டோனி பிளேயரின் இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பலஸ்தீன நாட்டு செக்ரடரி ஜெனரல் தயெப் ரஹிம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், சமாதானத்தை விரும்புகிறவர்களுக்கும, பலஸ்தீன மக்களுக்கும், மனித இனத்துக்கும் போப்பாண்டவரின் மறைவு பேரிழப்பாகும் என்று கூறியுள்ளார்.

இத்தாலி நாட்டு சனாதிபதி கார்லோ அஜெக்லியோ இயாம்பி தொலைக்கட்சியில் பேசியபோது கூறியதாவது:-

இத்தாலி நாடு தனது தந்தையை இழந்து விட்ட துக்கத்தில் மூழ்கியுள்ளது. சுதந்திரம் மற்றும் நீதிக்காகப் போராடிய போப்பாண்டவரை அனைவரும் தங்கள் நினைவில் வைத்து வழிபடுவார்கள்.

இவ்வாறு இத்தாலி நாட்டு சனாதிபதி பேசினார்.

ரஷிய அதிபரின் அனுதா...செய்தியில்:-

நமது காலத்தில் உள்ள தனிச் சிறப்பு வாய்ந்த ஒருவர் மறைந்து விட்டார். மனித குலத்தால் மதிப்பிடப்பட்ட இரண்டாம் ஜோன்போல் போப்பாண்டவரின் ஆன்மீகப் பாதையும், அரசியல் பாரம்பரியமும் உலக வரலாற்றில் நிச்சயம் இடம்பெறும்.

ரஷ்யாவும் வத்திக்கான் நகரும் அரசியல் ரீதியான பேச்சு வார்த்தை மற்றும் சர்வதேச விவகாரங்களில் ரஷ்யாவுக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான அலுவலக ரீதியிலான தொடர்பு மறக்க முடியாதவை போப்பாண்டவர் நேர்மையான. பொறுப்பான மனிதர். அத்துடன் மனம் திறந்து பேசக்கூடியவர். அவரது மறைவுக்கு ரஷ்யா தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு ரஷ்ய அதிபர் அனுப்பியுள்ள தந்தியில் கூறியுள்ளார்.

## பாக். அணு விஞ்ஞானிகள் பின்லேடனைச் சந்தித்தனர் அமெரிக்க உளவு நிறுவனம் திடுக்கிடும் தகவல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் அணு ஆயுதத்தந்தை என்று கருதப்பட்டவர் அப்துல்காதிர்கான். இவரது நம்பிக்கைக்குரிய அணு விஞ்ஞானி சுல்தான் பஷிருதீன் மெகமூத். அவர் அணுசக்தி ஆணைக்குழுத்தலைவராகவும் இருந்தார். அவர் ஆப்கானிஸ்தானில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறிக்கொண்டு காபூல் நகரில் ஒரு மையத்தை ஏற்படுத்தினார்.

2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி அவர் அந்த மையத்தில் இருந்தபோது கைதானார். அவரது மையத்தில் அமெரிக்க உளவு நிறுவனம் சி.ஐ.ஐ சோதனை போட்டது.

அப்போது அணு ஆயுதம் தயாரிப்பது, பராமரிப்பது ஆகியவை தொடர்பான தகவல்கள் அங்கு இருந்து கண்டெடுக்கப்பட்டன.

தீவிரவாத இயக்கமான லஸ்கர்-இ-தொய்பாவுக்கும், அணு விஞ்ஞானிகளுக்கும் இடையே இருந்த கடிதத் தொடர்புகளுக்கான ஆதாரமும் கிடைத்தது.

லஸ்கர்-இ.தொய்பாவின் கூட்டங்களிலும் ,பேரணிகளிலும் அந்த இரண்டு விஞ்ஞானிகளும் கலந்துகொண்டதும் தெரியவந்தது.

பின்லேடன் மற்றும் அல்-ஹைய்தா உயர்மட்டத் தலைவர்களை இந்த இரண்டு அணுவிஞ்ஞானிகளும் சந்தித்துப் பேசியதும் தெரியவந்தது.

அல்-ஹைய்தா பயங்கர வெடிகுண்டுகளைத் தயாரிக்க இந்த அணு விஞ்ஞானிகள் உதவி செய்ததாகவும் கூறப்படுகிறது.



அவுஸ்திரேலிய சிட்னி நகரில் ஆழிப்பேரலை நினைவாக தமிழ் இளையோர் அமைப்பு கடந்த சனிக்கிழமை நடத்திய 24 மணிநேர அடையாள உண்ணாவிரத நிகழ்வை படங்களில் காண்க.

# சுனாமியால் பாதிப்புற்றவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

(முல்லை)

சுனாமியால் பாதிப்புற்ற முல்லை மக்களுக்கான புனர்நிர் மாண அமைப்பால் 120 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப் பட்டன.

கடந்த வியாழனன்று அன்னமார் கோயிலடியில் வைத்து இவை வழங்கப்பட்டன. சுனாமியால் முல்லைத்தீவு நகரபகுதி யில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்போது துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அத்துடன் பாடசாலை மாணவர் களுக்கும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைப்பின் செயலாளர் அழகன் தெரிவித்துள்ளார். (20)

# சிறுவர் தொழிலாளர் அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாதுள்ளது

## - வவுனியா பொதுநல அமைப்புக்கள் கவலை

(செட்டிகுளம்)

**வவுனியா மாவட்டத்தில் சிறுவர் தொழிலாளர்கள் அதிகரித்துள்ளதுடன் இதனைக்கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது**

இதனை கட்டுப்படுத்துவதற்கு பாரியளவில் ஒரு சில நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வரும் போதும் இந்த நிலைமையினை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாக சிறுவர் விவகாரத்தில் ஈடுபாடு கொண்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த சிறுவர்கள் தமது வயதினை அதிகமாக தெரிவித்து கடைமைகளிலும் சில நிறுவனங்களிலும் பணிபு...து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கு பிரதானமான காரணம் கடந்த கால போரின் விளைவுகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது இவ்வாறு தொழில்களில் ஈடுபட்டு வருபவர்கள் பெரும்பாலும் நலன்புரிநிலையத்தில் வாழ்ந்து வருபவர்களாக இருப்பதாகவும் இவர்கள் பலர் தமது குடும்ப நிலைமை காரணமாகவே இவ்வாறு சிறுவர் தொழிலாளர்களாக மாறி இருப்பதாகவும், அவ்வாறு இவர்களை அந்த வேலைகளில் இருந்து மாற்ற நடவடிக்கை எடுக்கும் போது பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுவதாகவும் சிறுவர் நலனில் அக்கறை கொண்ட பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். (21)

# சூடைக்குடா பகுதியில் சாரணர் பயிற்சி முகாம்

(திருமலை)

திருகோணமலை மாவட்ட சாரணர் சங்கமானது பயிற்சி சாரணர் முகாம் ஒன்றினை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். எதிர்வரும் எட்டாம் திகதி தொடக்கம் பன்னிரண்டாம் திகதி வரை மூதூர் சூடைக்குடா என்னும் இடத்தில் இம்முகாம் அமையப் பெறவுள்ளது. இதில் 72 சாரணர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட சாரணர் சங்கம் மாவட்டம் தழுவியதான முகாம் ஒன்றினை விடுதலைப்புலிகளின் பிரதேசத்தில் அமைப்பது இதுவே முதல் தடவையாகும்.

இவர்களை வரவேற்று வேண்டிய ஒழுங்குளைச் செய்து கொடுபபதற்கு விடுதலைப்புலிகளும் முன் வந்துள்ளனர். கடல் அனர்த்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியான சூடைக்குடாவில் தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணியில் தொண்டர் நிறுவனங்கள ஈடுபட்டு வருகின்றனர். இவ் வேளையில் சாரணர்கள் முகாம் அமைப்பது தொண்டர் நிறுவனங்களால் பெரிதும் வரவேற்கப் பட்டுள்ளது.

## பயிற்சி நெறி மீண்டும் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

மழை காரணமாகவும், சுனாமி அனர்த்தம் காரணமாகவும் பிற்போடப் பட்டிருந்த உப மருந்தாளர் பயிற்சி நெறி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேற்படி பயிற்சிநெறி எதிர் வரும் 23 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதால் பயிற்சி நெறியினை மேற்கொண்ட அனைவரையும் மீண்டும் பயிற்சியில் கலந்து கொள்ளும் வண்ணம் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிர்வாகப் பணிப்பாளர் வேண்டியுள்ளார். (சோ)

# தேசிய எழுச்சிப் பேரவை ஊரக கிளைகள் புனரமைப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைகளின் புனரமைப்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. கல்விளான் பகுதியில் தேசிய எழுச்சிப் பேரவையின் புனர் அமைப்பு கட்டடம் கல்விளான் பொது நோக்கு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச செயலாளர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

கருத்துரைகளை துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கா. செல்வன் ஆற்றினார். தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம் பெற்றதில் செயலாளர் கு.ஜெகதீஸ்வரன் உப செயலாளர் கதிர்காமநாதன், பொருளாளர். பெ.ம.குணரெத்தினம் ஆகியோருடன் ஒன்பது உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர் .

இதேபோன்று கோட்டைகட்டிய குளம் அம்பலப்பெருமாள் பகுதியில் தேசிய எழுச்சிப் பேரவையின் புனரமைப்பு கட்டடம் அம்பலப்பெருமாள் குளம் பொது நோக்கு மண்ட பத்தில் அன்றைதினம் பி.ப.4.00 மணிக்கு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் கி.ஜெகநாதன் தலைமையில் இடம் பெற்ற போது புதிய நிர்வாகத் தெரிவுகளும் இடம் பெற்றன.

செயலாளர் வ.தாவீதுராசா, உப செயலாளர் க.இலட்சனேஸ்வரன், பொருளாளர் மு.சின்னத்தம்பி ஆகியோருடன் ஒன்பது உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இந் நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர், ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை; காலாவதியான பாவனைப் பொருட்கள் அழிப்பு!

(மல்லாவி)

மல்லாவி யோகபுரம் பகுதியில் தமிழீழ நிதித்துறையினரின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரல் காலாவதியான பொருட்கள் பல கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப் பட்டன.

கடந்த சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு விலைக்கட்டுப் பாட்டுப் பகுதியினர் திடீர் சோதனை மேற்கொண்ட போதே மக்களின் பாவனைக்குதவாத மென்பருகைகள், குழந்தைகளுக்கான பால்மா, பிஸ்கட்வகைகள் உட்பட 6500 ரூபா பெறுமதியான பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

எனவே இது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருந்து பொருட்களை கொள்வனவு செய்யும்படி விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர். (24)

## இன்று சங்கமம்

(மல்லாவி )

துணுக்காய் பிரதேசத்திற்கு உட்பட்ட கசல மாதர் சங்க உறுப்பினருக்கான சங்கம் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு அரசியல் துறை செயலகத்தின் பாரதி ஒன்று கூடல் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகம் அளிக்குமாறு துணுக்காய் பிரதேச அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (24)

# சம்பூர் சென்ற அரச அதிகாரிகள் படையினரால் தடுத்து வைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் கட்டைப்பறிச்சானில் அரசாங்க அதிகாரிகள் சிலர் சிறிலங்காப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டனர். இவர்கள் தனிப் பட்ட விஜயத்தை மேற்கொண்டு சனிக்கிழமை சம்பூருக்கு சென்றபோது கட்டைப்பறிச்சான் படைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பின்னர் நீண்ட நேர விளக்கத்தின் பின்னரே அவர்கள் விடுக் கப்பட்டுள்ளனர். படையினரின் இந்நடவடிக்கை குறித்து அரசாங்க அதிகாரிகள் விசனமும் அதிருப்தியும் வெளியிட்டுள்ளனர். (32)

# முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க.பாவின் தேவைகளை நிவர்த்தி செய்யக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

முத்துஐயன் கட்டு வலது கரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ... நீண்டநாட்களாக நிவர்த்தி செய்யப்படாத குறைபாடுகள் பல உள்ளது. என அப்பாடசாலை அதிபர் சி.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலையில் 537 மாணவர்கள் தரம் ஒன்று முதல் தரம் பதினொன்று வரை கல்விபயில்கின்றனர். வெளிமாவட்டங்களிலிருந்தே அதிகமான ஆசிரியர்கள் வந்து கற்பிப்பதனால் அவர்கள் தங்குவதற்கு விடுதி என்பது இப்பாடசாலையில் இல்லை. நியமிக்கப்படும் ஆசிரியர் பொருத்தமற்ற பாடங்களுக்கு நியமிக்கப்படுவதனால் கற்பித்தல் செயற்பாடு சீரற்ற முறையில் நடைபெற்று வருகின்றது.

அத்துடன் இப்பாடசாலையில் விளையாட்டு மைதானம் ஒழுங்கான வகையில் அமைக்கப்படவில்லை ஆய்வு கூட வசதிகள் இல்லை. மற்றும் நிரந்தரக் கட்டடங்கள் இல்லாதமையினால் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே மாணவர்கள் கற்று வருகின்றனர். முக்கியமாக எமது பாடசாலைக்கு வரும் வீதிகள் மிக மோசமாக பாதிக்கப் பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் செய் யப்பட்ட வீதிகள் இது வரைக்கும் புனரமைப்பு என்பது செய்யப்படவில்லை என்றும் பள்ளி முதல்வர் தெரிவித்தார். (கு)

# கல்லூரி அபிவிருத்திக்கு விசேட செயலணி அமைப்பு

(திருமலை)

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் அபிவிருத்தி கருதி விசேட செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பாடசாலை முகாமைத் துவக்குழு, அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பனவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டு அச்செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கல்லூரியின் கட்புல செவிப்புல கூடத்தில் இதன் விசேட அமர்வு நடைபெற்றது. அதிபர் மா. இராஜரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இச் செயலணியில் 18 விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதோடு ஒவ்வொரு விடயத்திற்கும் பொறுப்பாக இரு பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்புகளை ஏற்படுத்தி வேலைத்திட்டங்களை முன் னெடுப்பர். இவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்புக்களை கல்லூரி நிர்வாகம் வழங்கும். பாடசாலையின் ஆரம்பப்பிரிவுக்கான புதிய காணி கொள்வனவு, மைதான அபிவிருத்தி, பாடசாலை உள்புறம் அழகுபடுத்தல், கணனிக் கூடம், விளையாட்டு இணைப் பாடவிதானம், விடுதி வசதி, கல்லூரி விசேட தின கொண்டாட்டம் போன்ற 18 விடயங்களின் அபிவிருத்திக்காக இச்செயலணி செயற்படவுள்ளது.

# கமக்கார அமைப்பு நிர்வாகத் தெரிவு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச ஐயன்கன் குளம் கிராம கமக்கார அமைப்பு புதியநிர்வாகத் தெரிவு கடந்த 24ஆம் திகதி காலை 10.30 மணிக்கு ஐயன்கன்குளம் பொது நோக்கு மண்ட பத்தில் கமக்கார அமைப்பு முன்னாள் செயலாளர் பெ.சண்முக ரெத்தினம் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் கருத்துரைகளை பாண் டியன்குளம் துணுக்காய் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் இன்பபாவலன், துணுக காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப் பாளர் கா.செல்வம் ஆகியோர் நிகழ்த் தினர். தொடர்ந்து நிர்வாகத் தெரிவு களும் இடம் பெற்றதில். தலைவராக தா.தருமர், செயலாளராக ச.மோகன தாஸ், பொருளாளராக மெ.மரிய தாசன், உபதலைவர் சி.குகன், ஆகி யோருடன் உறுப்பினர்கள் தெரிவு களும் இடம் பெற்ற நிகழ்வில் கமக் கார அமைப்பு பிரதிநிதிகள், பொருண் மிய மேம்பாட்டு நிறுவன இணைப் பாளர்கள், பொதுமக்கள், போராளி கள், எனப் பலரும் கலந்து கொண்ட னர். (24)

# பரமபுத்திரனின் 'தூயமனதுடன்' நூல் இன்று கிளிநொச்சியில் அறிமுகம்

(அலுவலக செய்தியாளர்)

பரமபுத்திரனின் "தூய மனதுடன்" எனும் நூல் அறிமுகவிழா இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் இன்று மாலை 3.00 மணியளவில் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா தலைமையில் மேற் படி நூல் அறிமுகவிழா நடைபெறவுள்ளது.

விசுவமடு சுகன் கல்வி நிலையம் வெளியிடும் இந்நூல் அறிமுகவிழா விற்கு அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றனர் கிளி .அழகியல் கலாமன்றத்தினர். (கு)

# மயானத்தில் சத்தமிட்டு அழக்கூடாது அமைதியாகத் தகனம் செய்ய வேண்டும்

## – துண்டி படையினர் இட்டுள்ள கட்டளை

(யாழ்ப்பாணம்)

**யாழ். கொழும்புத்துறையிலுள்ள துண்டி மயானத்திற்கு தகனக்கிரியைகளை நிறைவேற்றச் செல்வோர் சத்தமிட்டு அழாது, பறை முழங்காது அமைதியாக உடலைத் தகனம் செய்ய வேண்டுமென துண்டியில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படையினர் கட்டளையிட்டுள்ளனர்.**

சுமார் 3500 குடும்பங்களுக்கு பொதுவானதாகக் காணப்படும் இத் துண்டி மயானமானது கொழும்புத் துறைப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படையினரது இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அண்டியிருப்பதனால் அம்மயானத்தில் மக்கள் சுதந்திரமாக நடமாடுவது தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதனைக் காரணம் காட்டியே சிறிலங்காப் படையினர் இக் கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக இம் மயானத்திற்கு மரணித்தவரின் உடலைத் தகனம் செய்யக் கொண்டு செல்ல வேண்டுமாயின் அதற்கு முற்கூட்டியே படையினரது அனுமதியைப் பெற வேண்டும் என்றும் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதியில் வைத்து எவரும் சத்தமிட்டு அழவோ, பறைகளை முழங்கவோ கூடாது எனவும் நிபந்தனை விதித்துள்ளனர்.

இதனால் இப் பகுதி மக்கள் நிம்மதியாக சுதந்திரமாக இறந்தவரது உடலைத் தகனம் செய்யக் கூட இயலாத நிலையிலுள் ளனர். (33)

## கிளைக்குழுக்களுக்கான கூட்டங்கள்

யாழ்.பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவு சங்கக் கிளைக் குழுக் களுக்கான கூட்டங்கள் அந்தந்தக் கிளைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அதிகாரம் அளிக்கப்பட்ட தவிசாளர்கள் தலைமையில் எதிர் வரும் 09 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு இடம் பெறவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது. (33)

## உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான விசேட கலந்துரையாடல்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் சகல உள்ளூராட்சி உதவியாளர்களுக்குமான விசேட கலந்துரையாடல் வலி தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 4.00 மணிக்கு இக்கலந்துரையாடல் இடம் பெறும் இதில் சகல உள்ளூராட்சி உதவியாளர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுகப்பட்டுள்ளனர். உள்ளூராட்சி உதவியாளர்களது பதவியை உறுதிப்படுத்தல், சேவை பிரமான குறிப்பு, வேதன அளவுத்திட்டம் , கடமைப் பட்டியல், நிர்வாகப்பொறுப்பு என்பன சம்பந்தமாக விரிவான அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் எட்டாம் திகதி மாலை 4.00 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம் பெறும் கலந்துரையாடல் தொடர்பாகவும் ஆராயப்பட உள்ளதால் சகல உள்ளூராட்சி உதவியாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

## கடந்த ஆண்டு யாழ். குடாநாட்டில் மழையால் சேதமான வீடுகளை புனரமைக்க நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் பெய்த அடை மழை காரணமாக சேதமான வீடுகளைப் புனரமைப்பதற்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த ஆண்டு யாழ். குடாநாட்டில் என்றுமில்லாதளவு அதிகபட்ச மழை வீழ்ச்சி ஏற்பட்டதால் இங்குள்ள ஏராளமான வீடுகள் பகுதியாகவும்,முற்றாகவும் சேதமடைந்துள்ளன.

இவ்வாறான சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்கள் தம் வீடுகளின் சேதவிபரங்கள் பற்றி அரசாங்க அதிபரிடம் புகார் செய்ததுடன் அவற்றை புனரமைக்க உதவிகளை வழங்க வேண்டும் எனவும் அரச அதிபருடாக அரசாங்கத்தைக் கோரியிருந்தனர் இதற்கு அமைவாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கென 97 லட்சம் ரூபா உடனடியாக யாழ் அரச செயல கத்திற்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

இந்நிதி யாழ்.குடாநாட்டில் மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பிரதேச செயலர் களூடாகப் பகிர்ந்தளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## கடற்கரையிலிருந்து 300 மீற்றருக்குள் உள்ள பாடசாலைகளை இடம்மாற்ற முடிவு

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளில் கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தூரப் பகுதினுள் அமைந்திருக்கும் பாடசாலைகளை மட்டுமே இடமாற்றுவதென தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24ஆம் திகதி யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் இடம் பெற்ற இக் கூட்டத்தில் கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன் சுனாமி பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் உதவிகளை வழங்கி வரும் தொண்டமைப்புக்களினதும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்பிரகாரம் கடற்கரையிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள மணற்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் கேவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை என்பவை தொடர்ந்தும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளன.

எனினும் கடற்கரையினை அண்மித்த தாக உள்ள வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு, தாளையடி மற்றும் ஆழியவளை றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலைகளிற்கும் மாமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வெற்றிலைக்கேணி பரமேஸ்வராவித்தியாலயம் என்பனவற்றினை இடம்மாற்றி அமைப்பதற்கான அரச காணிகள் அதிகாரிகளால்அடையாளங் காணப்பட்டுள்ளது.

ஆயினும் இதுவரை இக் காணிகள் உத்தியோகபூர்வமாக தம்மால் பொறுப் பேற்கப்படவில்லையென தெரிவிக்கும் வடமராட்சி வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் இவ் விடயத்தில் பிரதேச செயலாளாகளுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர். (27)

## உயர்பாதுகாப்பு வலயத்தால் மிளகாய்ச் செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்பொழுது மிளகாய்ப் பயிர்ச்செய்கை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளதாக மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டில் மிளகாய்ப் பயிர்ச் செய்கையில் அதிக விளைச்சலைத் ஏற்படுத்தித் தரக்கூடிய வலிகாமம் மற்றும் தீவக நிலப்பரப்புக்கள் பலவும் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கி வைக்கப்பட்டிருப்பதாலும்:- முறையான விளைச்சலைத் தரக் கூடிய புதியரக மிளகாய் உள்ளீடுகள் மற்றும் இடுபொருட்கள் நாசினிகள் என்பனவற்றை தேவையான அளவு யாழ். குடாநாட்டில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதனாலுமே இங்கு மிளகாய்ப் பயிர்ச்செய்கை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது.

இதனால் விவசாயிகள் மட்டுமன்றி பொது மக்களும் தமது உணவுத் தேவைகளுக்காக மிளகாயை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். என மேலும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (33)

## முதலுதவிப் பயிற்சி வழங்க இல.செ.சங்கம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திகளின் சாரதி மார் மற்றும் நடத்துனர்கள் ஆகியோருக்கு விசேடமுதலுதவிப் பயிற்சிகளை வழங்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிற்றூர்தி விபத்துக்களில் காயமடைவோருக்கு உடனடியாக முதலுதவிச் சிகிச்சைகளை வழங்காது விடுவதும் விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புக்கள் அதிகரித்திருக்கின்றமைக்குக் காரணம் என்பதை உணர்ந்து.

எதிர்கால விபத்துக்களின் போது ஏற்படும் வீண் உயிரிழப்புக்களை தவிர்க்கவும் குறைக்கவுமே இவ் விசேட முதலுதவிப் பயிற்சிகளை வழங்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தீர்மானித்திருக்கிறது. (33)

## வீதி விளக்கு இல்லை பயணிகள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இணுவில் பகுதியில் காங்கேசன்துறை வீதியில் அமைந்திருக்கும் தியேட்டர்ச்சந்தியிலும் அதனை அண்டியபகுதிகளிலும் உள்ள வீதிகளிலும் வீதியோர மின்விளக்குகள் பொருத்தப்படவில்லை.

இதனால் இப்பகுதி இரவில் இருளில் மூழ்குவதுடன் இரவுநேர விபத்து அதிகம் இடம்பெறுகின்றன. பயணிகளும் அசௌகரிங்களை எதிர் கொண்டுள்ளனர். (33)

## பாடசாலையின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்து தரக் கோரிக்கை

(தென்மராட்சி)

சங்கானை கல்விக் கோட்டத்தில் அதிக மாணவர்களை கொண்டு இயங்குகின்ற சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

1200இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் இப் பாடசாலைக்கு மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு அடிப்படைத் தேவையாகவுள்ள பாடசாலை நூலகத்திற்கான தளபாடங்கள், மாணவர்கள் பிரார்த்தனைக்கான பொதுமண்டபம், பாடசாலை மாணவர்களுக்கான பாண்ட் வாத்தியக் கருவிகள், பாடசாலைக்கு சுற்று மதில், ஆசிரியர்களுக்கான மேசை, கதிரைகள் தட்டுப்பாடகவும் இல்லாமல் இருப்பதாகவும் இவற்றை நிறைவு செய்வதன் மூலமே மாணவர்களின் வளமான கல்வியையும், ஆரோக்கியமான சமூகத்தையும் வளர்க்க முடியும் என பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (28)

## 100 குழாய்க்கிணறுகள் அமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களது குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் 100 குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களும் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களும் தமக்கான குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டே இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் இவ்வாறான குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. (33)

## வடிசாலைக் கழிவு நீரால் சுற்றாடல் பாதிப்பு

(தென்மராட்சி)

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள வடிசாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் இப்பகுதியின் சுற்றாடல் பாதிக்கப்பட்டு இருப்பதுடன் இப்பகுதியிலுள்ள குடிநீர்க் கிணறுகளும் மாசடைந்து வருவதாக இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மற்றும் இந்த நீர் விளை நிலங்களுக்குள் உட்புகுவதால் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டு இருப்பதுடன் மாசடைந்த இந்த நீரைக் குடிக்கும் கால்நடைகளும் நோய்த்தொற்றுக்கு இலக்காகி வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

கடந்த காலங்களில் இந்த வடிசாலையில் அமைக்கப்பட்டிருந்த கழிவுநீர்க் குழாய்கள் யுத்த அனர்த்தத்தில் சிதைவடைந்து விட்டதால் இக்கழிவுநீர்கள் பொதுமக்களின் பகுதிக்குள் ஊடுருவிச் செல்வதாகவும் இதனால் இப்பகுதி மக்கள் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

**இந்தப் பேரனர்த்தம்** யாரையும் பார்த்துத் தாக்கவில்லை. அகப்பட்டவர்கள் எல்லோரையும் தாக்கிவிட்டது. அதனால் சிலர் தமது குடும்பத்துடன் முழுமையாக இறந்து போய்விட்டார்கள். சிலர் குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் பிரிந்து தனியாக தப்பி இருக்கிறார்கள்.

இழப்பின் தாக்கத்தில் முழுமையாக அமிழ்ந்து போய் தற்கொலையின் விளிம்பில் கூட பலர் நின்றிருந்தார்கள். அதனால் சம்பந்தப்பட்டவர்களை மாத்திரம் சந்தித்து ஆறுதல் படுத்த வேண்டிய நிலையில் இருந்துவிலகி அவரைச் சூழ உள்ளவர்களுக்கும் உளவள ஆலோசனையை வழங்க வேண்டிய தேவையான பணி. சொத்திழப்புக்களை நாங்கள் உடனடியாக நிவர்த்தி செய்துவிடலாம் ஆனால் உளரீதியான பாதிப்பை ஒரு போதும் உடனடியாக நிவர்த்தி செய்து விட முடியாது. நீண்டகாலம் மனதில் நிலைத்திருக்கக்கூடியது தான் உளப்பாதிப்பு. எனவே அதற்காக அதனை மேம்பாடு அடையச் செய்வதற்காக நீண்டகாலம் உழைக்க வேண்டும்.

இதுவரை காலமும் நிறுவன ரீதியாக செயற்பட்டுவந்த உளவளத்துணையாளர்கள் மீது சுனாமி ஒரு பெரும் பணியை ஏற்படுத்திவிட்டது. நீண்டகாலமாக பணி புரிந்தவர்கள் என்ற வகையில் அவர்கள் இந்தப் களது அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொண்டு அவர்களை இத்தகைய பாதிப்புக்களில் இருந்து விடுபடச் செய்தோம்.

உளவளம் பாதிக்கப்பட்டுப் போயிருக்கிறவர்களுக்கு ஆலோசனை வழங்குகின்ற உளவளத் துணையாளர்களே பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகுமானால் அது மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இத்தகைய பாரதூரமான நிலை உருவாகுவதை எங்களால் அனுமதிக்க முடியாது. அதனால் உளவளத்துணையாளர்களின் உளவளத்தை பேணுகின்ற சந்தர்ப்பத்தைத் தொடர்ச்சியாகக் கொடுத்துக் கொண்டிருக் முற்றாக மாற்றி அனைத்து மக்களை தேடிப் போய் பணி செய்து வேண்டிய நிலையை உருவாக்கியது. எங்களது அணுகு முறையை முழுமையாகவே மாற்றியது. இந்த நிலையில் எங்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

யுத்த காலத்தில் வெவ்வேறு வகையான பாதிப்புக்கள் தான் ஏற்பட்டது. ஆனால் இந்த இயற்கை அழிவில் ஒரே வகையான பாதிப்பு பலருக்கு ஏற்பட்டது. முன்னைய காலங்களில் நீண்ட பிரதேசங்களுக்கு தேடிச் சென்று குறுகிய தொகையிலானவர்களைச் சந்தித்து உளவள ஆலோசனைகளை வழங்கினோம். ஆனால் இங்கு நிலைமை முற்றிலும் மாறு

**"சுனாமி அலைகள் சில நிமிடங்களில் ஏற்படுத்திய சுமையான பாதிப்புக்களால் பலர் உளரீதியாக மிகவும் மோசமான பாதிப்புக்குள்ளாகி இருந்தார்கள். அனைத்தையும் இழந்துவிட்டோம் எனியும் எதற்காக நாங்கள் உயிருடன் இருக்க வேண்டும்? என்ற கேள்வி பலரது உள்ளங்களிலும் எழுந்திருந்தது. அந்த முடிவால் பலர் பாரதூரமான முடிவுகளை எடுக்கின்ற நிலைக்குப் போயிருந்தார்கள். அவர்களைத் தேடிச்சென்று அணுகி உளவள ஆலோசனையை வழங்கி விரக்தி நிலையில் இருந்து மீள்வடையச் செய்தோம். இதுவரை காலமும் சமூகத்தில் உள்ள அனைவராலும் உணரப்படாத நிலையில் இருந்த உளவளத்துணையின் முக்கியத்துவத்தை-தேவையை சுனாமிஏற்படுத்திவிட்டுப் போயிருக்கிறது" எனக் கடல் அலைகளின் கோரவெறிக்குள்ளாக்கி தமது உறவுகளை இழந்தும் பிறபாதிப்புக்குள்ளாகிப் போயிருந்த மக்களுக்கான உளவள ஆலோசனைகளை வழங்கிவரும் அன்னை இல்ல உளவளத் துணை உளவியல் அறிவூட்டும் நிறுவன இயக்குநர் வணபிதா றெஜினோல்ட் அடிகளார் தெரிவித்தார். அவரது அனுபவம் இந்தப் பகுதியிலும்தொடர்கிறது.**



பகுதி–45

# இழப்புக்களின் தாக்கத்தில் சிக்கித் தவித்தவர்களை அரவணைக்க வேண்டிய பாரிய பொறுப்பில் இருந்தோம்

தேவை எழுந்தது. விரக்தியின் விளிம்பில் நின்ற பெருமளவானவர்களை உளவள ரீதியில் அணுகிச் செயற்பட்டதால் விரக்தி நிலையில் இருந்து மாற்றம் பெறவைக்க முடிந்தது.

பாதிக்கப்பட்டுப்போய் இருக்கிற மக்களின் விடயத்தில் சமூகத்தில் உள்ள அனைத்து தரப்புக்களும் மென்மையான போக்கைக்கடைப்பிடிக்க வேண்டும். உளவளத்தின் வலிமையை அனைவரும் அறிந்து கொண்டு அதற்கமைவாகச் செயற்பட வேண்டிய க ட்டாயம் எழுந்திருக்கிறது.


இந்தநிலையில் பாதிப்பிற்குள்ளாகி போயிருந்த மக்கள் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் நண்பர்களின் வீடுகளிலும் போய் இருந்தார்கள். அதனால் எங்களது வேலை இரண்டு மடங்காகமாறியது. வீடுகளில் இருப்பவர்களையும் தேடிப்போய் சந்தித்து உளநல ஆலோசனையை வழங்கினோம்.

அனர்த்தத்தில் சிக்கி உளநெருக்கடிகளுக்குள்ளாகிப் போனவர்களுக்கு உளவள மேம்பாட்டை செய்கின்ற பணியை நல வாழ்வு அபிவிருத்தி நிறுவனம் ஒழுங்கு படுத்திச் செய்து கொண்டிருந்தது.

இப்படி பாதிப்படைந்த மக்களுக்கு எப்படி உளவள ஆலோசனைகளை வழங்குவது என்பது தொடர்பாக வெளிநாடுகளில் இருந்து வருகின்ற உளவியலாளர்கள், உள

பணிக்கு தயாரான நிலையில் இருந்தார்கள்.

ஆனாலும் கொடுமையான வேதனை



யான சம்பவங்களைக் கேட்கின்ற பொழுது உளவளத்துணையாளர்களையும் பாதிப்படையச் செய்யும். இதனால் பாதிக்கப்பட்டமக்களுக்கு உளவளத்துணை வழங்குவது போல உளவளத் துணையாளர்

# முல்லையில் ஆழிப்பேரலைகள் நடத்திய கோரத்தாண்டவம்

மருத்துவர்கள் எங்களுடன் கலந்துரையாடி புதியவழிமுறைகளை கையாள்கிறோம். இந்தப்பணி மிகப் பெரும் பணி. நீண்ட காலம் தொடரப்படவேண்டிய நிச்சயம் களுக்கும் ஆலோசனை வழங்கவேண்டிய தேவை எழுந்தது. அதனால் உவளத்துணையாளர்களை சந்தித்து அவர்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகளை கேட்டு, எங்

கிறோம.

சுனாமி அடித்த பொழுது உடனடியாக இருந்தது பாதிக்கப்பட்ட மக்களின் உளவளத்தை பேணவேண்டும்

என்ற தேவைதான். அதன் பின்னர் எங்களுக்கு எழுந்த பிரச்சினை உளவளத் துணையாளர்களின் உளவளத்தைப் பேண வேண்டிய பிரச்சினை. இரண்டு பொறுப்புக்கள் எங்கள் முன்னால் இருந்தது. அவை இரண்டையும் நாங்கள் சளைக்காது தொடர்ச்சியாகச் செய்து வருகிறோம்.

நீண்டகால யுத்தத்தில் சந்தித்த பேரிழப்புக்களில் மூன்றில் ஒரு பகுதியை ஒரு சில நிமிடங்களில் சந்தித்து விட்டோம். ஒட்டுமொத்தமாக எங்களது மக்கள் சுனாமியில் பாரிய உயிரிழப்புக்களை சந்தித்திருந்தார்கள்.

ஒவ்வொரு மக்களும் தமக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஒவ்வொருவகையில் பார்த்தார்கள்.

சுனாமிக்குப் பின்னர் இருந்த எங்களது பணியின் வடிவங்கள் அனைத்தையும் பட்டதாக இருந்தது.

தாக்கத்தின் வலிமை குறுகிய இடத்தில் குவிந்திருந்தது. அதாவது பெரும் பாதிப்படைந்தவர்கள் குறிப்பிட்ட இடத்தில் குவிந்திருந்தார்கள்.

சுனாமியின் தாக்கத்தை பொறுத்தமட்டில் அவசியமாக தேவைப்பட்ட பணிகளில் உளவளம் முக்கியம் பெறுகிறது.

உளவளத்தின் முக்கியத்தை அதன்

**அ.லோகீசன்**

தேவையை சமூகத்துக்கு சுனாமி ஏற்படுத்தியிருக்கிறது. இதன் முக்கியத்துவம் இப்போது தான் உணரப்பட்டிருக்கிறது. எனவே சமூகத்தில் உள்ள அனைவரும் இதன் முக்கியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு உணர்ந்து செயற்பட்டால் தான் பாதிப்படைந்து போயுள்ள மக்களின் வாழ்வை உளவளத்தை கட்டி எழுப்ப முடியும். இப்படியாக எங்களுக்கேற்பட்ட சவால்கள் அனைத்தையும் வெற்றிகரமாகத் துணிந்து நின்று எதிர்கொண்டோம். எங்களது இந்தச் செயற்பாட்டால் எவரையும் விரக்தி நிலைக்குச் சென்று உயிரிழக்க விடவில்லை. ஒவ்வொருவருட னும் அவர்களை ஆறுதல் படுத்துவதற்காக நாங்கள் பெரும் கஷ்ரங்களை அனுபவித்தோம். எது எப்படி இருந்தாலும் எங்கள் உளவளத்துணையாளர்கள் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் ஆறுதல்படுத்துவதற்காக பயணித்த தூரம் என்பது கொஞ்சமல்ல என்றார் அவர்.

சுனாமிப் பாதிப்புக் குள்ளான முல்லை நகரில் மீட்பு நடவடிக் கைகளை மேற்கொள்வதில் தமிழீழ நிதிப்பிரிவின் பங்களிப்புப் பற்றியும் தான் அங்கு கண்ட காட்சிகள் பற்றியும் நிதித்துறையின் தள அமைப்புப் பொறுப்பாளர் அவர்கள் பகிர்ந்தவை அடுத்த பகுதியில்.

தொடரும்....



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்



## இரக்கம் காட்டுவது யார்?

**இந்திய** - பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட்போட்டி விசாகப்பட்டிணத்தில் இன்று நடைபெறுகின்றது.

கொச்சியில் நடைபெற்ற முதலாவது போட்டியில் இந்தியா 87 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. அதற்கு முன்பு முடி வடைந்த டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுக் தொடரை சமன் செய்தது.இந்த வெற் றிக்குப்பின்னர் இந்திய அணித்தலைவர் கங்குலி மீது எந்தவித கருணையும் காட்டப்படாது என இன்சமாம் அறிக்கை விட்ட பின்னர்.நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்தியா 87 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

எனினும் இன்சமாம் உல்-ஹக் வாயினால் கூறியதை சச்சின் டெண்டுல்கர் செயலில் நிருபித்தது போல் முதலாவது ஒரு நாள் போட்டியில் ஈவிரக்கம் காட்டாது ஐந்து விக்கெட்டுக்களையும் அபகரித்து விட்டார்.

அனைவராலும் ஆவலோடு எதிர் பார்க்கும் சச்சின் டெண்டுல்கரின் துடுப் பாட்டம் கடந்த வருடம் நடைபெற்ற ஆசிய கிண்ணப் போட்டிகளிலும், மினி உலகக் கிண்ணப்போட்டிகளிலும் காணமுடியாமல் போனதுடன் ரசிகர்கள் பெரும் ஏமாற்ற மடைந்தனர். அத்துடன் இத்தொடர்களில் சச்சின் பங்கேற்காதமை தமக்கு பெரும் சாதகம் என்றும் இன்சமாம் தெரிவித் திருந்தார். அவர் கூறியதில் எவ்விததவ றும் கிடையாது என்பது இப்போது புரிந் துள்ளது. காரணம் பாகிஸ்தானுக் கெதி ரான போட்டிகளுக்கு முன்பு துடுப்பாட்டத் தில் சற்று தடுமாறிய டெண்டுல்கர் அண் மைய போட்டிகளில் அரைச்சதங் களைப் பெற்று ரசிகர்களுக்கு தெம்பூட்டியதுடன் தனது கடந்த கால நிலைக்கு வந்து விட்டதாக அறிவிக்கும் ஒன்றாக ஆட்டம் காணப்பட்டது.

ஆனால் துரதிஷ்டவசமாக முதல் ஒரு நாள் போட்டியில் நான்கு ஓட்டங்களால் களத்தை விட்டு வெளியேறிய போதும் பகுதிநேர பந்து வீச்சாளராக வந்து பாகிஸ்தான் வீரர்களை ஒரு கலக்கு கலக்கிவிட்டு வெற்றியுடன் சென்றுள்ளார். டெண்டுல்கர் முழங்கையில்ஏற்பட்ட காயம் காரணமாக நீண்ட காலமாக ஓய்வில் இருந்து மீண்டு வந்துள்ளார். பாகிஸ் தானுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது எல்லைக் கோட்டுக்கு அருகில் இருந்து சேகரித்த பந்தை இலக்கு நோக்கி எறிந்து பாகிஸ்தான் வீரரை ரன் அவுட் ஆக்கியதிலிருந்து சச்சின் ஒரு நிரந்தரமான உறுதி நிலைக்கு வந்திருப்பது தெரிகின்றது.

எனவே அடுத்து வரும் போட்டி களிலும் சச்சின் துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் கருணை காட்டுவாரா என்பது அவருக்கே வெளிச்சம்.


வடிவேல்

## அச்சுறுத்தும் இணை

**டெஸ்ட்** கிரிக்கெட் வரலாற்றில் அச்சுறுத்தும் வேகப்பந்து வீச்சாளர்களும் சுழல் பந்து வீச்சாளர்களும் தோன்றி மறைந்துள்ளனர். அந்த வரிசையில் தற்போது உலகத் தர வரிசையில் முதலாவது இடத்தைப் பிடித்திருப்போர் அவுஸ்திரேலியாவின் கிளன் மெக்ராத்தும், ஷேன் வோர்னும் ஆவர். இவர்கள் இருவரும் இணைந்து டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 1072 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி யுள்ளனர். அதில் ஷேன் வோன் 121 போட்டி களில் பங்கேற்று 573 விக் கெட்டுக் களையும்

மெக்ராத் 107 போட்டிகளில் 499 கைப்பற்றியுள்ளனர். ஓவர்களையும் மெக்ராத் 1005 வீசியுள்ள னர். ஒரு இன்னிங்சில் மேல் எடுத்த சந்தர்ப்பம் ஷேன் 23ஐ எட்டியுள்ளார்.

விக்கெட்டுக்களையும் ஷேன் வோர்ன் 1037 ஓட்டமற்ற ஓட்டமற்ற ஓவர்களையும் ஐந்து விக்கெட்டுக்களுக்கு வோர்ன் 20 ஆகும் மெக்ராத் இவர்களுக்கு அடுத்த



படியாக சிறிலங்காவின் முத்தையா காணப்படுகின்றது. ஐந்து சந்தர்ப்பம் 32 முத்தையா நிலையில் சமிந்த வாஸ் ஏழு ளுக்கு மேல் பெற்றுள்ளார். அனில் கும்ளேயும்,ஜவகர் சிறி

முரளிதரன் சமிந்தவாஸ் இணை விக்கெட்டுக்களைப் பெற்ற முரளிதரன் எட்டியுள்ள முறைஐந்து விக்கெட்டுக்க மூன்றாவதாக இந்தியாவின் நாத்தும் காணப்படுகின்றனர்.

*1950களில் அவுஸ்திரேலியா வின் அலன் வேவிட் சன் ரிச்சி பெவ்ப் இணையும்* மெக்ராத் ஷேன்வோர்ன் இணைபோன்று காணப்பட்டனர். பாகிஸ் தானின் இம்ரான்கான் அப்துல் காதிர் இணையும் 44 போட்டிகளில் பங்கேற்று 332 விக்கெட்டுக்களைப் பெற்றுள்ளனர்.

இவர்களைப் போன்று எதிர்காலத்தில் எந்த நாட்டில் வேகப் பந்து சுழல் பந்து இணை உருவாகும் என்பது தற்போது கூற முடியாது

## வாழ்வில் இனிமையானது

எந்த ஆட்டத்திலும் வெற்றி என்பது மிக இனிமையானது அதுவும் இக்கட்டான நிலையில் அணி இருக்கும் போது வெற்றி இன்னும் இனிமையானது.

இன்சமாமைப் பொறுத்தவரை அவரது நூறாவது டெஸ்டை என்றென்றும் ஞாபகத் தில் வைத்திருப்பார். வாழ்வின் முக்கியமான டெஸ்ட்டாக அமைந்து விட்டது அவரது 184 ஓட்டங்கள் மட்டுமல்ல போட்டியின் கடைசி நாளில் அணியை தலைமை தாங்கி நடத்திய விதமும் மிகச் சிறப்பாக இருந்தது.

ஆனால் ஒரு மிகச் சிறந்த டெஸ்ட் ஆட்டமும் அற்புதமான தொடரும் அணித் தலைவருக்கு தடை விதிக்கப்பட்டதோடு நிறைவடைந்தமைதான் வேதனைக்குரியது.

ஏனெனில் கடைசி டெஸ்ட் போட்டி நடுவர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் எனப் பலரையும் சோதிப்பதாக இருந்தது.

பிடி கொடுத்த பின்னரும் துடுப்பாட்ட வீரர் கள் வெளியேற முன் வராததால் நடுவர்கள் மீதான நிர்ப்பந்தம் அதிகரித்தது.

தொலைக்காட்சியில் திரும்பத் திரும்பப் பார்க்க வேண்டிய வாய்ப்பு இருப்பதால் தங்களது எல்லை எது என்பதை நடுவர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

இந்நிலையில் வீரர்களின் விரக்திஅதி கரித்துக் கொண்டே போகின்றது.

துடுப்பாட்ட வீரரின் துடுப்பில் பந்து பட்டதா என்பது நடுவருக்கு தெரியாது போக லாம். ஆனால் துடுப்பாட்ட வீரருக்கு நிச்சயம் தெரியும். அதனால் முறையீடு செய்வோர் முடிவுகள் தங்களுக்கு எதிராக இருப்பதாக கருதுகின்றனர். இதனால் இன்சமாம் நிதானத்தை இழந்தார். முடிவில் இன்ச மாமுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டு ஒரு போட்டித் தடை விதிக்கப்பட்டது. ஆனால் மிகச் சிறந்த ஆட்டத்தில் பங்கேற்றதற்காக தம்மைத் தாமே அவர் தேற்றிக் கொள்ளலாம்.

தற்போது ஆண்டுக்கு 12 டெஸ்ட் போட்டி களில் ஒவ்வொரு அணியும் விளையாடுவ தால் நூறு டெஸ்ட்களில் விளையாடும் வாய்ப்பு நிறைய வீரர்களுக்கு கிடைக்கிறது. ஆனால் அதுமட்டுமே சிறந்த ஆட்டக்காரர் என்ற பெயரை அளிப்பதற்கான அளவு கோல் அல்ல.

பாகிஸ்தான் அணியில் மலை போல காட்சி அளிக்கிறார் இச்சமாம் புள்ளி விபரங் களை ஒதுக்கி விடுங்கள். மைதானத்தில் அவர் காட்டும் தன்னம்பிக்கை பிரமாதம், மேற்கிந்தியத்தீவின் விவியன ரிச்சட்டை ஒத்ததாக இருக்கிறது.

## லாறா வேண்டாம்...

**கிரிக்கெட்டில்** இன்று பரபரப்பாக பேசப்படும் விவகாரமாக மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்கள் பற்றியதாக உள்ளது.

அணித்தலைவர் லாறா உட்பட ஏழு முன்னணி வீரர்கள் விளம்பர ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டமை அவர்களை அணி யில் இடம் பெற முடியாத அழுத்தத்திற்கு உட்படுத்தியது.

இதனால் ஒப்பந்தத்தை முறித்துக் கொள் வதா? நாட்டுக்காக விளையாடுவதா? என்ற கேள்வி அவர்களிடையே பலமாக எழுந்தது.

இதில் சர்வான், கிறிஸ் கெய்ல்ஸ் ஆகியோர் தமது எதிர்காலத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு அணிக்கு திரும்ப சம்மதம் தெரிவித்தனர்.

ஆனால் லாறாவால் அதிலிருந்து வெளிவர முடியவில்லை. அது அவரின் சுயநலமா அன்றி நிர்ப்பந்தமா என்பது அவருக்கே வெளிச்சம்.

இந்த நிலையில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான மேற்கிந்தியத்தீவு அணி புதிய இளம் வீரர்களை இணைத்து அறிவிக்கப்பட்டது. அவ்வணிக்கு சந்தர்போல் தலைவராக நிய மிக்கப்பட்டார்.

இந்த நிலையில் லாறா அணியில் முன்னணி வீரர்கள் சேர்க்கப் பட்டால் தானும் விளையாடத்





தயார் என அறிவித்தார்.

ஆனால் கேபிள் அன் வயலெஸ் விளம் பர ஒப்பந்தத்தை கைவிட்டாலே அணி யில் இடமென மேற்கிந் தியத்தீவு கிரிக்கெட் சபை திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

ஒருவர் பிரபல்யம் அடையும் போது அவரை வைத்து தமது பொருட்களை விளம் பரப்படுத்துவது விளம்பர நிறுவனங்களின் வழமையே இதில் லாறா உட்பட ஏனைய முன்னணி வீரர்கள் விதி விலக்கல்ல. ஆனால் ஒரு உலகப் புகழ் பெற்ற வீரர் இதில் சிக்குப்பட்டு அணியிலி ருந்து நீக்கப்படுவது என்பது தான் வேத னைக்குரியது.

இவர்களை பொறுத்து ஏனைய அணிகளின் முன்னணி வீரர்களுக்கு கிடைக்கும் ஊதியம் போன்று கிடைப்ப தில்லை என்பது கிரிக்கெட்டைத் தெரிந்தவர்களுக்கு தெரியாத விடய மல்ல. ஆனாலும் லாறா போன்ற முன் னணி வீரர்கள் உலகத் தரத்துக்கு உயர்வதற்கு கிரிக்கெட் சபை யின் கணிசமான பங்குள்ளது என்பதை மறந்து விட முடியாது.

ஒரு வீரன் அணிக்காக விளையாட வேண்டுமே தவிர அவருக்காக அணி விளையாட முடியாது. வீரர்கள் தங்களின் நலனிலேயே கரிசனை காட்டு வதாகவே இதனை நோக்கும் போது கருதத் தோன்று கிறது.

பிந்திக் கிடைத்த தகவலின் படி லாறா உட்பட அனைத்து வீரர்களும் விளம்பர ஒப்பந்தத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் அணிக்கு திரும்பும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த நிலையில் சந்திரபோல் தலைமையில் மேற்கிந்தியஅணி தென்னா பிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பெருத்த சவாலை விடுத்துள்ளது. எனவே நீக்கப்பட்ட லாறா உட்பட முன்னணி வீரர்கள் ஏனைய போட்டிகளில் இடம் பெறுவார்களா என்பது மேற்கிநதியதீவு கிரிக்கெட் சபையிலேயே தங்கியுள்ளது. இதுஇவ்வாறி ருக்க 35 வயதை எட்டியுள்ள புகழ்பெற்ற துடுப்பாட்ட வீரர் லாறா.இது போன்ற சர்ச்சை களில் இனியும் சிக்காது 2007 உலகக் கிண்ண போட்டியுடன் கௌரவமாக விடை பெற வேண்டும் என்பதே அனைவரதும் அவாவாகவுள்ளது.

# மக்களின் சுமையை அதிகரிக்காமல் அரசாங்கம் ஆட்சி நடத்த வேண்டும்

~எதிர்க்கட்சித் தலைவர் அறிவுறுத்து

(கொழும்பு)

மாகாணசபைகளூடாக ஐந்து வீதம் அறவிடப்படவுள்ள வர்த்தக பிறழ்வு வரியினால் சாதாரண மக்களே பாதிக்கப்படுவார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வரி விதிப்பை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அநுராதபுரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வர்த்தகர்களுடனான சந்திப்பில் உரையாற்றும் போதே ரணில் விக்கிரம சிங்க இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:- சுனாமி அனர்த்தத்திற்கு வெளிநாட்டு நிதியுதவிகள் இருக்குமானால் நாட்டைப் புதிதாகக் கட்டியெழுப்ப முடியுமானால் ஏன் இந்த ஐந்து வீதவரி அறவிட வேண்டும்? இந்த வரி அறவிடப்படுவதால் பாதிக்கப்படுவது வியாபாரிகள் அல்ல. சாதாரண பொது மக்களே. இதனால் இந்த வரி விதிப்புக்கு முழுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம். அரசாங்கத்தின் கணக்கீடுகளைப் பார்த்தால் அரசிற்கு இலாபம் தான் இருக்கிறது. நஷ்டம் இல்லை அவ்வாறாயினும் ஏன் மக்களின் சுமையை அதிகரிக்க வேண்டும்? கூட்டமைப்பு அரசாங்கம் சுமையை அதிகரிக்காமல் ஆட்சி நடத்த வேண்டும். இல்லாவிட்டால் வீட்டிற்குச் செல்ல வேண்டும். வரி மன்னிப்பு சட்ட மூலத்தை ரத்துச் செய்தால் வருடமொன்றிற்கு இருபதாயிரம் கோடி ரூபா அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்குமென கடந்த வருடம் கூறினர். அவ்வாறு இருபதாயிரம் கோடி ரூபா கிடைத்தால் ஏன் ஐந்து வீதவரி அறவிடப்பட வேண்டும்? எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்

## வீதி விதிமுறைகளை மீறிய 26 ஆயிரம் பேருக்கு பிடியாணை

(கொழும்பு)

சிறிலங்காவில் வீதி போக்குவரத்து சட்டங்களை மீறுதல், மது போதையில் வாகனம் செலுத்துதல் போன்ற குற்றங்களுக்காக 26 ஆயிரம் பேருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் கொழும்பு பொலிஸ் பிரதான காரியாலயத்திற்கு உத்தரவிட்டுள்ளார். இவர்கள் அனைவரும் நீதி மன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகி உள்ளார்கள். எனப் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. இதனால் தென்பகுதி முழுவதிலும் பொலிஸ் திணைக்களத்தினால் விசேட தேடுதல்கள் நடைபெற்று வருகின்றன.

## விசேட ஆராதனைகள்

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவர்கள் மரணமடைந்ததையடுத்து மன்னார் மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் நேற்றுக்காலை விசேட ஆராதனை இடம்பெற்றது. அத்துடன் கத்தோலிக்க மக்களின் வீடுகளில் கறுப்புக்கொடிகளைக் கட்டித் துக்கங்களை தெரிவித்துக்கொண்டுள்ளனர். (18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### கணபதிப்பிள்ளை சிவராசா
### நாட்டுப் பற்றாளர்



தமிழீமெனும் உன்னத விழுமியத்திற்காக... உன் ஊக்கமிகு ஆக்கங்களை தமிழீழ ஊடகத்துறையுடனே பற்றுணர்வுடனே அயராது செயற்பட்டாய். ஈருருளி தனிலே வலித்து செல்லும் பெருமை அற்ற நண்பனே- சிவாஅண்ணா வேர்து (த) களைப்புடனே காண்போம் உனை. என்னதான் சலிப்புடனே வந்தாலும்-நீ நாம் வதைபட்டு துயருற்றிருந்தாலும் எமை மன மகிழ வைக்கும் உன் பகிடிவதைகள் கேட்டதும் எமது துயர் மறந்து பறந்து விடும். முகிலன் அண்ணே நீ செய்து விடும் கேலிப் பகிடியும், சிரிப்புக்களும். அரச பிரதேசத்துக்குள் சென்றாய் ஊடகத்துறையின் சேவையாளனே உனக்கு என்ன கதி நிகழ்ந்தது விதியா சதியா எதுவென்று புரியாது ஏங்கும் உன் நண்பர்கள்.

குணா அழகுகம்,
பரந்தன்

ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளும்.தென்மராட்சி சைனிஸ், பளை- வின்சன், கொடிகாமம் சிறி,தாவளை இயற்றாலை பாரதி சன சமூக நிலையத்தினர், சும்மா இன்சுவை உணவக உரிமையாளர்,பணியாளர்களும் குணா அழகுகம் பரந்தன்.

தகவல் ; -
சிறி

(சி.5965)

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 14 - 09 - 1973 | 05 - 04 - 1998 |

### 2 ஆம் லெப். செந்தமிழன்

(திருச்செல்வராசா-பிரபாகரன்)

ஆண்டுகள் ஏழு கடந்தாலும் உன் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது.

திருச்செல்வராசா,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா, சகோதரர்கள், மைத்துனர்
மருமக்கள், மாமா, சின்னம்மா.

(.5817)

## சனாதிபதியின் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

பத்து ஆண்டுகளுக்குள் மிகவும் விரிவான விமான சேவையில் சிறிலங்கா விமான் சேவை வளர்ச்சியடையும் எனத் தான் எதிர்பார்ப்பதாக சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த விமான சேவை தற்போது உலகின் பல அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தனது சேவையை விஸ்தரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் சிவில் விமான சேவையின் ஆரம்பம் தொடர்பான சஞ்சிகையை வெளியிட்டு வைக்கும் வைபவத்திலேயே அவர் இதனைக் கூறினார். மேலும் கூறுகையில்; தற்போது இந்த நாடுகளில் 40 நகரங்களினைச் சேர்ந்த பயணிகளுக்கு இந்தச் சேவைகள் வழங்கப்படுகின்றது. இதே போன்று விமான சேவைகள் குறைந்த செலவில் இயங்குவதைக் காண்பது எனது எதிர்பார்ப்பு எனவும் தெரிவித்தார்.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



| தாய் மடியில் முத்தாக:- | தாயக மண்ணில வித்தாக |
|---|---|
| 13 ❃ 04 ❃ 1977 | 05 ❃ 04 ❃ 2000 |

### மேஜர் நிர்மலா

(செல்வரத்தினம்- விஜயலட்சுமி)

கேணல் கிட்டுப் பீரங்கிப் படையணி

கயவனை அழிக்க களத்திடைவிரைந்து
களமாடி காவியமான~ எம் கண்மணியே
ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
அழியாது உம் பாச முகம்.

தகவல்:~
செ. விக்னேஸ்வரி
(தாய்)
தம்பிராய் பூநகரி

(சி.5954)

என்றும்
குடும்பத்தினர்.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



இ. பானுஜா 05.04.2005

உழவனூர் - நாதன் குடியிருப்பில் வசிக்கும் சிறிலதன் - தயாநிதி தம்பதிகளின் செல்வப்புதல்வி பானுஜா தனது முதலாவது பிறந்த நாளை 05.04.2005 செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி பானுஜா இறை அருளால் பல்கலையும் கற்று சீரோடும், சிறப்போடும் வாழ்கவென அன்பு அப்பா - அம்மா, (ஜெயபுரத்தில் வசிக்கும் அம்மப்பா - அம்மம்மா, சித்திமார்கள், தயாதேவன் மாமா குடும்பத்தவர்) பூநகரியில் வசிக்கும் மாமாமார்களான தயாபரன், தயானந்தன், தயாரூபன் குடும்பத்தவர்கள்(கிளிநொச்சியில் வசிக்கும் தயாசீலன் மாமா குடும்பத்தவர்கள், (முள்ளியவளை- முறிப்பில் வசிக்கும் த.லக்சிகன், கச்சாயில் வசிக்கும் அப்பப்பா - அப்பம்மா, அத்தைமார்கள், பெரியப்பா குடும்பத்தவர்கள்) ஆகியோர் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் -
அம்மப்பா பொ. தங்கராசா
சமாதான நீதவான்.

(சி.11617)

# சர்வாதிகார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் ஜெயலலிதாவின் ஆட்சியை வீழ்த்த மக்கள் தயார்!

## - சென்னை - கண்டனக் கூட்டத்தில் கருணாநிதி

(சென்னை)

**சர்வாதிகார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் ஜெயலலிதாவின் ஆட்சியை வீழ்த்த மக்கள் தயார் என்று தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி தெரிவித் துள்ளார். சென்னையிலே நடைபெற்ற அ.தி.மு.க.வின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்து நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசும்போது கருணாநிதி இவ்வாறு கூறினார்.**

அவர் தொடர்ந்து பேசும்போது தேர்தல் எப்போது வந்தாலும் அ.தி.க.மு.வுக்குத்தோல்வி உறுதி யானது. இறுதியாக நடைபெற்ற தேர்தலிலே தமிழகத்தில் 40 இடங்களிலும் தோல்வியடைந்து சரியான பாடம் படித்துள்ளார்கள். இதற்கு ஜெயலலிதா பாராளுமன்றத் தேர்தல் பெரும் மோசடியுடன் நடைபெற்றுள்ளதாகக் கூறியுள் ளார். இதற்கெதிராக வழக்குப் போடவுள்ள தாகவும். தெரிவித்துள் ளார்.

அவர் போடும் வழக்கை நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். என்றும் கருணாநிதி மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் தற்போது நடை பெற்றுக்கொண்டிருக்கும் அராஜக ஆட்சிக்கு விடைகொடுத்து வீட்டுக்கு அனுப்பவேண்டும். இதற்கு நாங்கள் மாத்திரம் செயற்பட்டால் போதாது. இங்கே இருக்கின்ற பல்லாயிரக் கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்களும் தயாராக வேண்டும். தற் போதைய நிலைமைகளைச் சீர் தூக்கிப் பார்க்கவேண்டும் எது சரி, எது தவறு என்று தீர்ப்புக் கூறு கின்ற நீதிப திகளாக நீங் கள் மாறுகின்ற நிலை வர வேண்டும் என வும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# காஷ்மீரில் முஷாரப், மன்மோகன்சிங்கின் உருவப்படங்கள் காட்சிக்கு வைப்பு!

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் பாகிஸ்தான் சனாதிபதி மற்றும் பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோரின் உருவப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

காஷ்மீருள்ள ஸ்ரீநகரில் இருந்து பாகிஸ்தானின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் முசபராபாத் திற்கு பேருந்து விடப்பட இருக்கிறது. இவற்றுக்கு இடைப்பட்ட தூரம் 170 கிலோ மீற்றராகும். இந்த பேருந்து போக்குவரத்தின் ஆரம்ப விழா வருகிற ஏழாம் திகதி ஸ்ரீநகரி லுள்ள கிரிக்கெட் அரங்கில் நடைபெற விருக்கிறது. பிரதமர் மன்மோகன்சிங் கொடி அசைத்து பேருந்துப் போக்கு வரத்தை ஆரம்பித்து வைக்கிறார். இதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றன.


பேருந்து போக்குவரத்து ஆரம்பிப்பதையொட்டி ஸ்ரீநகர் விழாக்கோலம் பூண்டு வருகிறது. அத்துடன் இங்கே பாகிஸ் தான் சனதிபதி முஷாரப்பின் படங்கள் வைக்கப்பட் டுள்ளன. காஷ்மீரில் பாகிஸ்தான் தலைவர் ஒருவரின் படம் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். இது புதியதொரு மாற்றத்தை பிரதி பலிப்பதாக அமைந்துள்ளது. அப்படி வைக் கப்பட்டுள்ள ஒரு பதாகையில், "தூரத்தைக் குறைத்து இதயங்களை இணைத்தவர்கள்" "இரு துருவங்களை இணைத்து அமைதிக்கு பாலம் அமைத்தவர்கள்" என்ற வாசகங்கள் இடம் பெற்றிருக்கிறது. பிரதமர் மன்மோகன்சிங்முஷாரப் ஆகியோரது படங்கள் அருகருகே அதில் காட்சி தருகிறது.

இந்தியா - பாகிஸ்தான் நல்லு றவு ஏற்படுவதற்கு முன்பு இது போன்ற உருவப்படங்கள் அயல் நாட்டுத் தலைவரின் படங்கள், பாகிஸ்தான் கொடி போன்றவை வைக்க தடை செய்யப்பட்டிருந்தது. அவற்றைப் பொலிசார் அகற்றி விடுவார்கள். ஆனால் தற்போது முஷாரப்பின் படத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# 21 மாநிலங்களில் பெறுமதி சேர் வரி முதலாம் திகதி முதல் நடைமுறை!

(புதுடில்லி)

ஆயிரத்து ஐந்நூறு வகையான பொருட்களுக்கு பெறுமதி சேர் வரி நடைமுறை விதிக்கப்படுகிறது. பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை கடந்த முதலாம் திகதி தொடக்கம் மத்திய அரசு அமுல்படுத்தி யுள்ளது. இருந்தபோதும். இந்தப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நடைமுறை தமிழ் நாடு, உத்தரப்பிர தேசம்,குஜராத், ராஜஸ்தான்,மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் அமுல் படுத்தப்படவில்லை. இவை தவிர 21 மாநிலங்கள் இப்பெறுமதி சேர் வரியை நடைமுறையில் கொண்டு வந்துள்ளது. கடந்த சனவரி மாதம் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட பெறுமதி சேர் வரி பற்றிய வெள்ளை அறிக்கையில் 500 பொருட்கள் மீது வரிவிதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பெறுமதி சேர் வரி பற்றிய வெள்ளை அறிக்கையிலுள்ள சில தகவல்கள் தவறானவை என்று சில மாநில அரசுகள் அறிவித்துள் ளன. அகில இந்திய வாத்தக சங்கமும் பெறுமதி சேர் வரி நடைமுறையில் சில முரண்பாடுகள் உள்ளன. என்று கூறியுள்ளன. அனைத்து மாநிலங் களுக்கும் ஒரே வகையான வரி விதிப்பை நடை முறைப்படுத்துவ தற்கே இந்தவரி விதிப்புக் கொண்டு வரப்பட்டதாகும்.



திருச்சியின் லால்குடி ஆற்றங்கரையின் அருகேயுள்ள வயலில் இருந்து 18 அடி நீளமான இராட்சத முதலையை வனவளத்துறையினர் பிடித்துள்ளனர். இதன் வாய் 6 அடியும்,உடம்பு 8 அடியும்,வாலப்பகுதி 4 அடியும் ஆகும்.

# குழந்தைப் பருவ திருமணத்தில் வட இந்தியா முன்னிலை!

(புதுடில்லி)

இந்தியாவில் குழந்தைத்திருமணம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 18 வயதும் அதற்குக் கீழ்ப்பட்ட வயதுடையவர்களும் திருமணம் செய்துகொண்டிருப்பவர்கள் சுமார் 64 இலட்சம் பேர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் இன்னமும் இடத்துக்கிடம் கடவுள் பக்தி மற்றும் சோதிடம் பார்ப்பது போன்ற செயற்பாடுகளின் மூலமும், மரபு வழியாக வந்த நடை முறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் குழந்தைப் பருவத்தில் திருமணம் செய்து கொள்வது கணிசமாகவுள்ளது. 2001 ஆம் ஆண்டின் அறிக்கைப் படி 18 வயதுக்குட்பட்ட 64 இலட்சம் பெண்கள் திருமணம் செய்து கொண்டுள்ளனர். திருமணம் செய்வதற்கு ஆண்களின் வயது எல்லை 21 ஆகவும் பெண்களின் வயது எல்லை 18 ஆகவும் சட்டம் இருந்தபோதிலும் மொத்தமாக ஒருகோடியே 18 இலட்சம் பேர் இவ்வாறான குறைந்த வயதுத்திருமணம் செய்து கொண்டுள்ளார்கள்.

மத்திய அரசு எடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 18 வயதின் கீழ் திருமணம் செய்த பெண்களில் 30 ஆயிரம் பேர் தமது கணவனை இழந்துள்ளனர். 60 ஆயிரம்பேர் விவாகரத்துப் பெற்றுள்ளனர். 21 வயதின் கீழ் திருமணம் செய்து கொண்ட ஆண்களில் சுமார் 75 ஆயிரம் பேர் தமது மனைவியை இழந்துள்ளனர். இருப்பினும் பெண்களே அதிகமான சட்ட விரோதத் திருமணத்தில் ஈடுபட்டுக் கணவன்மாரை இழந்தவர்களாவர். இந்தக் குழந்ததைத் திருமண நடைமுறை பெரும்பாலும் வட மாநிலங்களிலேயே அதிகளவுள்ளது.

# பாப்பரசரின் மறைவுக்கு இந்திய பிரதமர், சனாதிபதி இரங்கல் செய்தி!

(புதுடில்லி)

கத்தோலிக்கர்களின் தலைவர் போப்பிற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், சனாதிபதி அப்துல்கலாம் ஆகியோர் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளனர்.

இதற்காக இந்தியா முழுவதும் மூன்று நாட்கள் துக்க தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தேசியக் கொடி அனைத்து முக்கிய இடங் களிலும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன. குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் தனது இரங்கல் உரையில் உலக அமைதிக்காகவும், சுதந்திரத்திற்காகவும் அயராது பாடுபட்டவர் போப்பாண்டவர் இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது எனக் கூறியுள்ளார்.

# ரஜனியை அரசியலுக்கு வர ரசிகர் மன்றம் அழைப்பு!

ரஜனியை அரசியலுக்கு இழுக்கும் முயற்சியில் மீண்டும் சேலம் ரஜனி ரசிகர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தமிழ் திரை உலகத்துக்கு உழைத்தது போதும். தமிழ் நாட்டு மக்களுக்காக உழைக்க வாருங்கள் என்ற வாசகங்கள் அடங்கிய 100 அடி நீளமும் 30 அடி உயரமும் கொண்ட பிரமாண்டமான பதாகையை சேலம் பேருந்து தரிப்புப் பகுதியில் சேலம் நாமக்கல் மாவட்ட ரஜனிரசிகர் மன்றம் சார்பில் நேற்று அமைத்தனர்.

தொடர்ந்து பல ஆண்டு காலமாக அரசியலுக்கு வருவாரா? வர மாட்டாரா? என்று சந்ததேகித்துக்கொண்டிருந்த கேள்விக்குறி கடந்த சில மாதங்களில் முற்றுப்பெற்றுள்ளது. பாராளுமன்றத் தேர்தலில் ரஜனியின் குரல் எடுபடாமல் போனதும் அதன் பின் தனது மகள் ஐஸ்வர்யா திருமணத்திற்கு முன்னாள் முதல்வர் கருணாநிதி மற்றும் முதல்வர் ஜெயலலிதா ஆகிய இருவரையும் வரவழைத்ததும் ரஜனியின் அரசியல் பிரவேச சந்தேகத்திற்கு முற்றுப்புள்ளியாக அமைந்தது. அவரது நெருங் கிய வட்டாரங்கள் கூட அவர் இனி அரசியலுக்கு வரமாட்டார் என்றே தெரிவித்தன.

இந்நிலையில்,விஜயகாந்த் அரசியலுக்கு வந்தேதீருவேன் என்று களத் தில் குதித்துள்ள நிலையில் தற்போது ரஜனியை எப்படியாவது வரும் சட்டசபைத் தேர்தலுக்குள் அரசியலுக்கு இழுக்க ரஜனி ரசிகர் மன்றங்கள் தீவிரமாக முயற்சி செய்து வருகின்றன.

எதிர்வரும் 14 ஆம் திகதி சந்திரமுகி படம் வெளிவரவுள்ள சூழலில் சேலம் நாமக்கல் மாவட்ட தலைமை ரஜனிகாந்த் நற்பணி மன்றம் சேலம் புது பேருந்து தரிப்புப் பகுதியில் மிகப்பெரிய பதாகையை வைத்து ள்ளது.

# இங்கிலாந்தின் கோடீஸ்வரர்களில் இந்தியரே முதலிடத்தில்!

இங்கிலாந்தின் கோடீஸ்வரர்கள் வரிசையில் முதல் இடத்தை ஒரு இந்தியர் பெற்றுள்ளார். அவரிடம் இங்கிலாந்து ராணி எலிசபெத்தை விட 50 மடங்கு அதிகம் சொத்து இருக்கிறது.

2005ஆம் ஆண்டுக்கான இங்கிலாந்தின் 1000 கோடீஸ்வரர் கள் பட்டியலை சண்டே ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அந்தப் பட்டியலில் முதல் இடத்தை இந்தியாவைச் சேர்ந்த லட்சுமி மிட்டல் பிடித்து இருக்கிறார். உருக்குத் தொழிலில் ஈடுபட்டுள்ள இவரது சொத்து மதிப்பு 1480 கோடி பவுண் (ரூ.1இலட்சத்து 20 கோடி) ஆகும். இந்த பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த மேலும் 26 பேரும் இடம்பெற்று இருக்கிறார்கள். இவர்களில் சுவராஜ் பாப் 27.5 கோடி பவுண் கவர் 175ஆவது இடம்பிடித்துள்ளார். இங்கிலாந்து ராணி எலிசபெத்துக்கு 180ஆவது இடமே கிடைத்திருக்கிறது. அவரது சொத்து மதிப்பு 27 கோடி பவுண் ஆகும். கோடீஸ்வரர்கள் பட்டியலில் முதல் இடத்தைப்பிடித்துள்ள இந்தியரான லட்சுமி மிட்டலின் சொத்து மதிப்பு இங்கிலாந்து ராணியின் சொத்து மதிப்பை விட ஏறத்தாழ 50 மடங்கு அதிகமாகும். 100 கோடீஸ்வரர்கள் பட்டியலில் இரண்டா வது இடத்தை ரோமன் அப்ராசோவிச் (750கோடி பவுண்), மூன்றாவது இடத்தை வெஸ்ட்மினிஸ்டர் கோமகன் (560 கோடி பவுண்). ஆகியோர் பெற்றனர்.

# பீகார் அரசியலில் திடீர் இழுபறி நிதிஸ்குமாருக்கு பஸ்வான் நிபந்தனை!

பாரதிய ஜனதாவுடனான உறவைத் துண்டித்தால்தான் நிதிஷ்குமார் ஆட்சி அமைக்க ஆதரவு தருவதாக பஸ்வான் நிபந்தனை விதித்துள்ளதால் பீகார் அரசியலில் திடீர் இழுபறி ஏற்பட்டுள்ளது. பீகார் சட்டசபைத் தேர்தலில் எந்தக் கூட்டணியும் ஆட்சி அமைக்க அதிகாரம் கிடைக்கவில்லை.

மொத்தமாகவுள்ள 243 சட்ட மன்ற உறுப்பினர்களில் 122பேரின் ஆதரவைப் பெறும் கட்சியை ஆட்சி அமைக்க அழைப்பேன் என்று ஆளுநர் பூட்டாசிங் கூறிவிட்டார். அதைத் தொடர்ந்து அங்குசட்ட சபை அமைக்கப்படாமல் சனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டுள்ளது. பீகாரில் லல்லுவின் ராஷ்ரிய ஜனதாதளம் பா.ஜ.இடம்பெறாத அரசு அமைப்பதில் லோக் ஜன சக்தி கட்சித் தலைவர் ராம்விலாஸ் பஸ்வான் ஈட்டுபட்டுள் ளார். அதேபோல தே.ஜ.கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஐக்கிய ஜனதாதளம் தலைவரும். முன்னாள் ரெயில்வே அமைச்சமான நிதிஷ்குமாரும் புதிய ஆட்சி அமைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். இது தொடர்பாக பஸ்வானும் நிதிஸ்குமாரும் சந்தித்துப் பேசினார்கள். பா.ஜ.கூட்டணியில் இருந்து வெளியேறி வந்து புதிய ஆட்சி அமைக்க நிதிஷ்குமார் விரும்பவில்லை. அதே போல புதிய ஆட்சிக்கு பா.ஜ.க.வின் ஆதரவை பஸ்வான் விரும்பவில்லை. இந்த சந்திப்புக்குப்பின் நிதிஷ் குமார் பா.ஜ.தலைவர் அத்வானியைச் சந்தித்து நீண்ட நேரம் விவாதித்தார். அதன் பிறுகு பேட்டியளித்த நிதிஷ்குமார் அத்வானியுடன் என்ன பேசினார் என்ற விபரத்தை வெளியிடவில்லை.

# கயானா டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

## மேற்கிந்தியத்தீவுக்கு வெற்றி வாய்ப்பு



கயானாவில் நடைபெறும் மேற்கிந்தியத்தீவுகளுடனான முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி இனிங்ஸ் வெற்றிபெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. நான்காம் நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை ஆடும் தென்னாபிரிக்கா ஆட்டநேர முடிவில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 85 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முன்னதாக ஆறு விக்கெட் இழப்பிற்கு130 ஓட்டங்களுடன் முதலாவது இனிங்ஸைத் தொடர்ந்து ஆடிய தென்னாபிரிக்கா நேற்று முன்தினம் மதிய இடைவேளையின்போது அனைத்து விக்கெட்டுக்களையுமிழந்து 188 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. இதனால், தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை ஆடும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இரண்டாவது இனிங்ஸில் சிமித் 34 ஓட்டங்களுடனும்,வில்லியர்ஸ் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இனிங்ஸில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 543 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

# நேப்பியர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

## வலுவான நிலையில் நியூசிலாந்து



நியூசிலாந்தின் நேப்பியர் நகரில் நேற்று ஆரம்பமான நியூசிலாந்து-சிறிலங்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து மூன்று விக்கெட் இழப்பிற்கு 267 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையிலுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். அதன்படி ஆரம்ப ஜோடியாக கிரேக் கம்மிங்கும் ஹமிஸ் மார்ஷலும் களமிறங்கினர். கம்மிங் 12 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சமிந்த வாஸின் பந்து வீச்சில் இலக்கை மறைத்தர் (L.B.W.) என்ற குற்றத்தில் ஆட்டமிழந்தார். பின்னர் ஜேம்ஸ் மார்ஷல் தனது சகோதரனுடன் இணைந்



தார். இவர்களிருவரும் அபாரமாக ஆடி இரண்டாவது விக்கெட் இணையாக 107 ஓட்டங்களைப் பெற்றனர். எனினும், உப்புள் சந்தனவின் பந்தில் மஹேலவிடம் பிடி கொடுத்த ஜேம்ஸ் மார்ஷல் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து அணித் தலைவர் களமிறங்கினார். அவரும் 16 ஓட்டங்களுடன் மாலிங்கவின் பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். ஆட்டம் வெளிச்சமின்மை காரணமர்க 25 நிமிடங்களுக்கு முன்னதாக நிறுத்தப்பட்ட போது கமிஸ் மார்ஷல் 133 ஓட்டங்களுடனும், நதன் ஆஸ்லே 37 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.



முல்லை வலய பாடசாலைகளுக்கிடையேயான 15 வயது பெண்கள் பிரிவிற்கான வலைப்பந்தாட்டப்போட்டி புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெற்றது. இதில் கொக்கிளாய் அ.த.க பாடசாலை அணிக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்குமிடையே இடம்பெற்ற போட்டியில் வெற்றியீட்டிய கொக்கிளாய் அ.த.க. பாடசாலை அணி.

(படம் : தவரட்ணம்)

# யாழ்.மாவட்ட கால்பந்துப் போட்டி

## மூன்றாம் சுற்று இன்று ஆரம்பம்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின்கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ் மாவட்டப்பிரிவின்ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தி வரும் உதைபந்தாட்ச் சுற்றுப்போட்டியின் மூன்றாம் சுற்றுப்போட்டிகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

சுன்னாகம்கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வட்டக்கச்சி விளையாட்டுக்கழகம்எதிர் வலிகாமம்லீக்கைச் சேர்ந்த ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்.

பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகம் எதிர் வலிகாமம் லீக்கைச்சேர்ந்த விநாயகர் விளையாட்டுக்கழகம். (41)-

# துணுக்காய் பிரதேச செயலர்

## விளையாட்டு முடிவுகள்



துணுக்காய் பிரதேச செயலர். பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த 24.03.2005 தொடக்கம் 01.04.2005 வரையும் மல்லாவி யோகபுரம் விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் சசிதரசீலன் தலைமையில் இடம்பெற்றன. இதன் நடுவராக செ.தவராசா செயற்பட்டார். இந்நிகழ்வில் குழுவிளையாட்டுப் போட்டிகளில் ஏழு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின இதில் மென்பந்துப் போட்டிகளில்.

வண்ணன் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் வெலிங்டன் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும். எல்லே விளையாட்டுப் போட்டிகளில் வெலிங்டன் விளையாட்டுக்கழகம் முதலாமிடம் மல்லாவி மத்தி விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடம்.

கரப்பந்தாட்டப் போட்டியில் வாணி விளையாட்டுக் கழகம் முதலாம் இடம் மல்லாவி மத்திய விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடம், கபடி கலைவாணி வி.க. முதலாம் இடம், பூமாலினி இரண்டாம் இடம், பெண்களுக்கான எல்லே போட்டியில் வண்ணன் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும் மல்லாவி மத்திய விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் வண்ணன் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும் மல்லாவி மத்தி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. கபடி வண்ணன் விளையாட்டுக் கழகம் முதலாம் இடம், வாணி விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடம், பெண்களுக்கான மென்பந்து போட்டிகளில் வண்ணன் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் மல்லாவி மத்தி விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தையும். பெற்றுக்கொண்டன. (24)

# போப்பாண்டவரின் மறைவையடுத்து இத்தாலியில் விளையாட்டுக்கள் ரத்து





உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப்பாண்டவர் இரண்டாவது ஜோன் போல் மறைவை அடுத்து, இத்தாலியில் வாரக் கடைசியில் நடைபெறவிருந்த விளையாட்டுப் போட்டிகள் அனைத்தையும் நிறுத்தி வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளது அந்நாட்டின் உயர் நிலை விளையாட்டு அமைப்பான ஒலிம்பிக் கமிட்டி.

அதன் தலைவர் கியானி பெட்ருச்சி இதற்கான உத்தரவை வெளியிட்டுள்ளார்.

# கால்பந்து வீரர்கள் கைகலப்பு

## நீண்டகாலபோட்டித் தடையே வழி




பீபா தலைவர்

கடந்த சனியன்று வட அம்பிரியாவில் நடைபெற்ற உதை பந்தாட்டப்போட்டியின் போது நியூகாஸ்ல் அணி வீரர்கள் கைகலப்பில் ஈடுபட்டமை தொடர்பாக விசாரணையொன்றுக்காக அந்நாட்டு உதைபந்தாட்டசபை அழைப்பு விடுத்துள்ளது. இந்தமோதல் நடைபெற்றபின்னர் முகாமையாளரை அழைத்துப் பேசியதாகவும் இரு வீரர்களையும் ஒருங்கே இணைத்துப் பேசியதாகவும் ஷெப்பாட் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் இரு வீரர்களையும் அணியிலிருந்து நிறுத்தவேண்டும் என சர்வதேச உதைபந்தாட்ட சங்கத்தலைவர் கோர்டன் டெய்லர் தெரிவித்துள்ளார்.

மைதானத்தில் போட்டியின் போது மோதிக்கொள்வது தவறான வழிநடத்தல் காரணமாகவே என யாரும் கூற முடியாது எனக் கூறிய அவர், அவர்களுக்கு வழங்கப்படும் அதிகூடியதண்டனை நீண்டகாலப் போட்டித் தடையாகும் என்றும் டெய்லர் தெரிவித்தார்.

வட அம்பிரியா பொலிசாரும் இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடத்த விருக்கின்றனர்.

# இலங்கை அணியுடனான ஒருநாள் தொடர் ஒத்திவைக்க இந்திய கிரிக்கெட்சபை முடிவு

இலங்கையுடன் இந்தியா பங்கேற்கவிருந்த ஒரு நாள் கிரிக்கெட் தொடர் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நடைபெற்றுவரும் பாகிஸ்தான் அணியுடனானஒரு நாள் தொடர் முடிவடைந்ததும், இலங்கை அணியுடன் ஐந்து ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்க இந்திய கிரிக்கெட்சபை திட்டமிட்டிருந்தது.

அப் போட்டிகள் வரும் 22 முதல் மே நான்காம் திகதி வரை நடத்தத்திட்டமிடப்பட்டன. அதைஉறுதி செய்வது குறித்து இலங்கை கிரிக்கெட் சபைக்கு தகவல் அனுப்பப்பட்டது. ஆனால் அந் நாட்டு கிரிக்கெட் சபையிடம் இருந்து இதுவரை தகவல் ஏதுவும் இல்லாததால் அத் தொடரை ஒத்திவைக்க முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தவிர, இலங்கை கிரிக்கெட்சபை நிர்வாகக் குழுவில் எழுந்துள்ள பிரச்சினையும் இம் முடிவுக்கு ஒரு காரணமாகியுள்ளது.இத் தகவலை பிசிசிஐ இணைச் செயலாளர் கௌதம் தாஸ்குப்தா மும்பையில் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார். இரு நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் விதமாக வேறு ஒரு திகதியில் அத் தொடரை நடத்தபோட்டிகள் மற்றும் அட்டவணைக் கமிட்டி முடிவு செய்துள்ளதாகவும் தாஸ்குப்தா தெரிவித்தார்.

# உடல் தகுதி பெற்றுவிட்டேன்

## அணியில் இணைய வாய்ப்பு



உடற்தகுதி பெற்றுவிட்டதாக பாக். அணியின் வேகப்பந்து வீச்சாளர் அக்தர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் சோஹைப் அக்தர் தசைப் பிடிப்புக் காரணமாக இந்தியச் சுற்றுப் பயணத்துக்கான பாகிஸ்தான் அணியில் இடம்பெறவில்லை.

சர்ச்சைக்குரிய சோஹைப் அக்தர் அணி பிசியோதெரபிஸ்ட் கிராண்ட் காம்ப்டன் மேற்பார்வையில் உடற்தகுதிக்கான பயிற்சி மேற்கொண்டு வந்தார்.

இந்த நிலையில் அக்தர் லாகூரில் நடந்த 20 ஓவர்கள் போட்டியில் ஆடினார். அதில் அவர் பந்து வீசினார்.

உடற்தகுதி பெற்றுவிட்டதாக நான் உணருகிறேன். பிசியோ தெரஸ்ட் காம்ப்டன் தான் முழுப் போட்டிக்குத் தகுதியாக இருக்கிறேனா என்பதை முடிவு செய்ய வேண்டும். முழுமையாக ஓடி வந்து பந்து வீசினேன். அப்போது வலி எதுவும் இல்லை. கால்த் தசையில் நெருக்கடியும் இருக்கவில்லை என்றார்.

# கிம் கிளியல்ஸ்ரர்சிடம் திருட்டு

சில காலம் காயம் காரணமாக போட்டிகளில் பங்கேற்காதிருந்த பெல்ஜியத்தைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனை கிம் கிளியஸ்ரர்ஸ் மியாமியில் நடைபெற்ற நாஸ்டாக் - 100 ஓபன் போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்றி தனது முன்னைய திறமையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவர் முன்பு நடைபெற்ற போட்டித் தொடரின்போது கலிபோர்னியாவிலுள்ள ஒரு நட்சத்திர விடுதியில் தங்கியிருந்தார். அதன்போது திருடர்கள் அவரின் அறையில் புகுந்து அவரிடமிருந்த பெரும் தொகைப் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இது நடந்திருப்பது அவர் காலை உணவைப் பெற்றுக் கொள்ளச் சென்றிருந்த போது என அறிவிக்கப்படுகிறது. அப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் லின்சே டெவன் போட்டை வென்று பெற்றுக் கொண்ட பரிசுத் தொகையான மூன்று லட்சத்து 32 ஆயிரம் அமெரிக்க டொலர்களையே திருடர்கள் கொள்ளையடித்துச் சென்றனர்.



கீ பிஸ்கேனில் சனிக்கிழமை நடைபெற்ற நாஸ்டாக்-100 ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில், தன்னை வென்ற பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளையஸ்ரர்ஸுக்கு வாழ்த்து தெரிவிக்கிறார் ரஷ்யாவின் மரியா ஷரபோவா (இடது) கிளைஸ்ரர்ஸ் 6-3,7-5 என்ற நேர் செட்களில் மரியா ஷரபோவாவைத் தோற்கடித்தார்.




இந்தியா- பாகிஸ்தான் இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று



### சிந்தனைக்கு



மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்து விடமுடியாது; உலகவரலாறு பகரும் உண்மை இது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 05-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## நம்பிக்கை எதுவரை?

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் – அரசாங்கத்திற்கும் இடையில் விரைவில் சுனாமி தொடர்பான பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படும் என நோர்வே சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் நோர்வேத் தரப்பு முனைப்புடன் செயற்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நோர்வேத் தரப்பு நம்பிக்கை வெளியிடுவது இது முதற்தடவை அல்ல. நோர்வேத் தரப்பினர் இது தொடர்பாக ஏற்கனவே பல தடவை நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். ஆனால், அவர்களின் நம்பிக்கைகள் இதுவரையில் நிறைவேறவில்லை என்பதே நிதர்சனமாகும்.

ஆனால், அதற்காக நோர்வேத் தரப்பில் குறைப்பட்டுக் கொள்வதற்கு இல்லை. நடைபெறும் பேச்சுவார்த்தைகள், வழங்கப்படும் உறுதி மொழிகள் என்பனவற்றின் அடிப்படையில் அவர்கள் எதிர்வு கூறுதல்களைச் செய்கின்றார்கள். ஆனால், அவை பின்னர் சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் குழப்பத்திற்கு உள்ளாகி வருகின்றன. பின்னர் இதற்காக நோர்வேத் தரப்புக் கடுமையாக உழைக்க வேண்டியதாகவும் உள்ளது.

நோர்வேத் தரப்பின் இன்றைய நிலைப்பாட்டின்படி, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்போதைக்கு ஆரம்பிக்கப்படுவதற்கான வாய்ப்பு எதுவும் இல்லை. பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு என்பதாகவே உள்ளது. ஆனால், நோர்வேத் தரப்பு இவ்விடயத்தில் ஒன்றை மனதிற் கொள்ளுதல் வேண்டும். அதாவது கடந்த காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பது, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை என்பன குறித்தும் இத்தகைய உணர்வுகளே வெளிப்படுத்தப்பட்டன என்பதாகும்.

அதாவது, இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த பேச்சுகள் விரைவில் ஆரம்பிக்கப்படலாம் என்ற நம்பிக்கை நோர்வேத் தரப்பால் பல தடவை வெளிப்படுத்தப்பட்டதுண்டு. ஆனால், சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அது கைவிடப்பட்டு தற்பொழுது பொதுக்கட்டமைப்புக் குறித்து நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆகையினால், இப்பொதுக்கட்டமைப்புக் குறித்தும் நோர்வேத் தரப்பு வெளிப்படுத்தும் நம்பிக்கையைத் தமிழர் தரப்பு வெளிப்படுத்த முடியுமா? தமிழ்மக்கள் நோர்வேத்தரப்பின் நம்பிக்கையைக் கொண்டு மன ஆறுதல் அடைய முடியுமா என்பதும் கேள்விக்குரியதே.

ஏனெனில், சிறிலங்கா ஆட்சியாளர்களுக்குத் தமிழர் பிரதேசங்களைப் புறக்கணிப்பதற்குத் தேவைப்படுவது ஒரு சாட்டு மட்டுமே. ஆகையினால், யுத்தத்தினால் அழிவுற்ற தமிழர் தாயகப் பிரதேசத்தின் புனர்வாழ்வுப் பணிகளைப் புறக்கணிக்க அன்றி ஓரம்தள்ள அரசாங்கத்திற்கு ஒரு சுனாமி (26.டிச. 2004) வாய்ப்பைக் கொடுத்தது. அதேபோன்று இனியும் ஏதாவது, இயற்கை அனர்த்தமோ அன்றி வேறு காரணி எதுவுமோ சிறிலங்காவிற்குக் கைகொடுக்கமாட்டாது எனக் கூறிவிடுவதற்கும் இல்லை.

எடுத்துக்காட்டாக, கடந்த 28ஆம் திகதி இரவு சுமாத்திராத் தீவிற்கு அண்மையாக ஏற்பட்ட பாரிய பூகம்பத்தால் சுனாமி அலைகள் மீண்டும் தாக்கலாம் என்ற எச்சரிக்கை எழுந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக சுனாமி தோன்றவில்லை. பதற்றத்துடன் மட்டும் நிலைமை முடிவிற்கு வந்துவிட்டது. ஆனால், எதிர்பார்க்கப்பட்டதுபோல் மீண்டும் ஒரு சுனாமி தாக்கியிருக்குமேயானால், சிறிலங்கா அரசு பொதுக்கட்டமைப்புக் குறித்த பேச்சுக்களையே இடை நிறுத்தி புதிய சுனாமி பற்றிப் பேசத் தொடங்கியிருக்கும்.

ஆகையினால், தற்பொழுது பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகக் காணப்படும் முன்னேற்றம் அதற்குச் சிறிலங்கா அரசாங்கம் குறிப்பாக, சனாதிபதி சந்திரிகா வெளிப்படுத்திவரும் ஒத்துழைப்பு என்பன மற்றொரு பாதிப்போ அன்றி வேறொரு நிகழ்வோ இடம்பெற்றால் மாறிவிடவும் கூடும். சுமாத்திராவிற்கு அண்மையாகத் தொடர்ச்சியாக இன்னமும் புவி நடுக்கங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இவைகூட சிறிலங்கா அரசாங்கத்திற்கு வாய்ப்பானதாக ஆகிவிடக்கூடும்.

அவ்வாறு தான் எதுவும் ஏற்படாது போனாலும்கூட, சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் எதிர்கால அரசியல் அபிலாசைகள் இப்பொதுக்கட்டமைப்பு வரை அவர் முன்னேற எந்தளவிற்கு வாய்ப்பளிக்கும் என்பது கேள்விக்குரியதே. அதாவது, மீண்டும் ஒரு தடவை சனாதிபதியாகவோ, அன்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராகவோ அவர் வர முற்பட்டு நிற்கையில், பொதுக்கட்டமைப்பு அதற்குப் பாதகமானதாக அமையுமானால், பொதுக்கட்டமைப்பைத் துக்கி எறிய அவர் தயங்கப்போவதில்லை.

ஆகையினால், நோர்வேத் தரப்புப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நம்பிக்கை வெளியிடும்போது சிறிலங்கா அரசுடன் நடைபெறும் பேச்சுக்களில் காணப்படும் முன்னேற்றம் – அவர்கள் வழங்கும் வாக்குறுதிகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு நம்பிக்கைகள் வெளியிடுவதைப் பல தடவை சிந்தித்து மேற்கொள்வதே மேல். அவ்வாறு இல்லாதுவிட்டால், நோர்வேத் தரப்பின் மீது தமிழ் மக்களும் நம்பிக்கை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடலாம்.

# தமக்கு நிரந்தரநியமனம் வழங்குமாறு
# தொண்டராசிரியர் சனாதிபதிக்கு மகஜர்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாணவர் தொகை அதிகமாகவும் ஆசிரியர்ஆளணி குறைவாகவும் இருந்த காரணத்தால்அதிபர்கள், அதிகாரிகளின் வேண்டுதல் களுக்கமைய 2000ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர் சேவை வழங்கிய 200ஆசிரியர்கள் எங்கள்வலயத்தில் உள்ளனர். வேதனம் இல்லாமல் ஆசிரியருக் குரிய சகலசுமைகளையும் சுமந்துமாணவரின் அடைவு மட்டத்தை உயர்த்தியமைக்கு சான்றுகளும் வரலாறுகளும் உண்டு என முல்லை மாவட்ட தொண்டராசிரியர்கள்தமக்கு நிரந்தரநியமனம் வழங்கக்கோரி சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளனர்

க.பொ.த உயர்தரத்தில் சித்தியெய்திய திருமணம் செய்த, திருமணம் செய்யாத 200 ஆசிரியர்களும் மானசீகமாக மாணவர்களையும் பள்ளிகளையும் மதித்து எம் சேவையை வழங்கினோம். இந்தவேளையில் மூன்று வருட தொண்டர் சேவையை முடித்துக் கொண்ட. தொண்டர்ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்வழங்குதல் என்ற இலங்கை அமைச்சரவை தீர்மானத்தை தங்கள்உரையிலிருந்து அறிந்து ஆனந்தம் அடைந்தோம்.

நிரந்தர நியமனம் கிடைத்துஎங்கள்குடும்பமெல்லாம் சீரும் சிறப்புடனும் வாழும் என்று நினைத்துக்கொண்டிருந்த வேளையில் வடக்குக்கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் அவர்கள் எங்கள் நியமனத்தை இடைநிறுத்தி வைத்திருப்பதான செய்தி வந்தது. இதனால் பெரிதும் கவலை அடைகிறோம். கைக்கெட்டியது வாய்க்கெட்ட வில்லை என்று ஆறுதலின்றித் தவிக்கிறோம்.

முல்லைத்தீவு வலயஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி எமக்கு வந்த நியமனத் தடையைகண்டித்து பேரணியுடன்கூடிய கூட்டமொன்றை நடத்துகிற இவ்வேளையில் முல்லைத்தீவு தொண்டராசிரியர் சங்கமும் எமது நிலைமை அடங்கிய அறிக்கையை அரசாங்க அதிபர் ஊடாக தங்களுக்கு அனுப்பிவைக்கிறோம். 1998 ஆம் ஆண்டிற்குப்பின் தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்காத நிலையில் வகுப்புக்களில்அறுபது மாணவர்களைத் தாங்கிக்கொண்டு முழுநேரப்பணி செய்த எங்களுக்கு கனிவு காட்டி வடக்குக்கிழக்கு மாகாண ஆளுநரால் இடைநிறுத்தப்பட்ட நியமனத்தை மீண்டும் வழங்கஆவன செய்யுமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.- (08)

சர்வதேச பாராளுமன்ற மாநாட்டில் பங்கேற்க

# பாராளுமன்ற உறுப்பினர்கள் பிலிப்பைன்ஸ் பயணமாகினர்

(மணிலா)

சர்வதேச பாராளுமன்றங்களின் கூட்டமைப்பின் 112 ஆவது மாநாட்டில் பங்கேற்பதற்காக சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்கள் பிலிப்பைன்ஸ் சென்றுள்ளனர்.

பாராளுமன்ற சபாநாயகர் லொக்கு பண்டாரா தலைமையில் இக் குழுவினர் சென்றுள்ளனர். இந்த மாநாட்டில் ஆழிப்பேரலை பாதிப்புகள் தொடர்பான சிறப்பு அவசரத் தீர்மானத்தை சிறிலங்கா வின் நிவாரணம் மற்றும் மனித உரிமைகள் குழுவின் தலைவரான ஜயலத் ஜெயவர்த்தன முன்மொழிய உள்ளார். இது தொடர்பான கடிதம் ஒன்று பெப்ரவரி 16 ஆம் திகதியன்று இந்தக் கூட்டமைப்பிடம் சிறிலங்கா சார்பில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. பொதுச்சபை கூடுவதற்கு முன்பாக இந்தத் தீமானத்தை தாக்கல் செய்ய அனுமதிக்குமாறு சர்வதேச பாராளுமன்ற கூட்டமைப்பின் செயலாளர் நாயகத்திடம் லொக்கு பண்டார கேட்டுக்கொண்டுள்ளார். பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்று முன்தினம் தொடங்கிய இம்மாநாடு எதிர்வரும் எட்டாம் திகதி வரை நடைபெறுகிறது (32)

# திருமலையில் 41 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது

(திருமலை)

திருகோணமலை வலயக் கல்வி திணைக்களத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து 41 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இரண்டாம் தவணை ஆரம்பம் முதல் செயற்படும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் இடமாற்றத்திற்கு ஆசிரியர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் கடல் அனர்த்தம் காரணமாக அரசின் பணிப்பிற்கமைய இடமாற்றங்கள் யாவும் இடைநிறுத்தப்பட்டு பங்குனி மாதம் முதலாம் திகதி இடமாற்றப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் பாடசாலைகளில் முதலாம் தவணை கற்பித்தலில் இடையூறுகள் ஏற்படாது தடுப்பதற்காக தவணை முடிவில் இந்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தனிப்பட்ட முறையில் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

மேன்முறையீடு செய்ய விரும்புபவர்கள் எதிர்வரும் எட்டாம் திகதிக்கு முன்னதாக கடிதம் மூலம் தனக்கு முறையீடு செய்ய வேண்டுமெனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (32)

# 50 ஆண்டுகளுக்கு முற்பட்ட வசதிகளுடன் யாழ்.வளிமண்டல ஆராய்ச்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வளிமண்டல ஆராய்ச்சி நிலையம் ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆய்வு வசதிகளுட னேயே தற்போதும் இயங்கி வருகின்றது.

யாழ். திருநெல்வேலியில் தற்காலிகமாக இயங்கி வருகின்ற வளிமண்டல ஆராய்ச்சி நிலையத்தில் இரண்டு அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர். 1950ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட ஆய்வு வசதிகளே தற்போதும் வானிலை ஆய்வுகளை மேற்கொள்ளப்பயன் படுத்தப்படுகின்றன. இதன் தலைமைக் காரியாலயம் கொழும்பில் உள்ள போதிலும் தொடர்பாடல்களை மேற்கொள்ள ஒரேயொரு தொலைபேசி மட்டுமே பயன்படுத்த வழங்கப்பட்டுள்ளது. அதனைவிடவும், இணையத்தளப் பாவனைக்காக கணினி உள்ளிட்ட நவீன வசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

நாட்டில் ஏற்படுகின்ற இயற்கைச் சீற்றங்கள் குறித்த அறிவுறுத்தல்கள் கொழும்பில் இருந்தே இந்நிலையத்துக்கு அனுப்பப்படும் என்று ஆராய்ச்சி நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ். குடாநாட்டின் மழை வீழ்ச்சிகளை மந்திகை, வட்டுக்கோட்டை, தீவகம் ஆகிய பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் அளவிடப்படுகின்ற போதிலும், அவற்றின் அளவீடுகள் நேரடியாக கொழும்பிற்கே அனுப்பப்பட வேண்டிய நிலை உள்ளது.

இதனால் யாழ். குடாநாட்டின் முழுமையான மழை வீழ்ச்சியை அதன் பிரதான காரியாலயத்தில் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதே வேளை சிறிலங்கா புனர்வாழ்வு அமைச்சினால் நிதி ஒதுக்கப் படாமையினால் இக்காரியாலயம் சொந்தக் காணியில் இயங்க முடியாத நிலை காணப்படுகின்றது. கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக திருநெல்வேலியில் பிறிதொரு கட்டடத்தில் இயங்கி வரு கின்ற இக்காரியாலயத்திற்கான சொந்தக்காணி யாழ். கடற்கரை வீதியில் உள்ளது. அங்கு போர் காரணமாக சிதைவடைந்துள்ள காரியாலயத்தைப் புனரமைத்து சேவைகளை முன்னெடுக்கத் தேவையான நிதி குறித்து சிறிலங்கா புனர்வாழ்வு அமைச்சுக்கு விண்ணப் பிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் இதுகுறித்து அக்கறை செலுத்தப்பட வில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# இந்து மத எழுச்சிப்பட்டறை

உலக இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் திருகோணமலையில் இந்து மத எழுச்சிப்பட்டறை ஒன்று நடைபெறவுள்ளது. இதில் 15 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட 200 பேர் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர். எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் பத்தாம் திகதி வரை நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் தங்குமிடத்துடன் கூடியதாக இப்பட்டறை நடை பெறவுள்ளது. பாடசாலை மாணவாகள் தமது விண்ணப்பங்களை அதிபர் ஊடாகவும், பொது நிறுவனங்கள் தமது தலைவர் ஊடாகவும் விண்ணப்பிப்பதன் மூலம் இப்பட்டறையில் கலந்து கொள்ள முடியும். விண்ணப்பங்கள் அதிபர்,நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயம், என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

# மக்கள் தீர்மானிக்கும் நேரத்தில் யுத்தத்தை ஆரம்பிக்கத் தயாராம்

## - ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

மக்கள் தீர்மானிக்கும் எந்த ஒரு நேரத்திலும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக பாதுகாப்புப்பிரதி அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவருமான ரடணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார். போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் விடு தலைப்புலிகள் விமான ஓடுதளம் அமைத்தது, புதிய முகாம்களை அமைத்தது மற்றும் விமானங்களை தம்வசப்படுத்தியிருப்பது போன்ற விடயங்களில் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதா? இல்லையா? என்பதை தீர்மானித்ததன் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானிக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். (32)

# மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பியது

கிளிநொச்சியில் கடந்த நான்கு நாட்களாக தடைப்பட்டிருந்த மின்சார விநியோகம் நேற்று மாலையில் இருந்து வழமைக்குத் திரும்பியது. ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த மின்பிறப்பாக்கி பழுதடைந்துள்ளமையினால் அதனைப் பழுதுபார்க்க இன்னும் ஒருவாரத்திற்கு மேலாகும். என்பதால் அனைவரது வேண்டுகோளுக்கிணங்கவும் சிறிய இரண்டு மின்பிறப்பாக்கிகள் மூலம் மின் வழங்கப்படுகின்றது. இவற்றில் கிளிநொச்சி டிப்போச்சந்தியில் உள்ள மின் மாற்றி பகுதியில் ஒரு இயந்திரமும்,வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மின்மாற்றி பகுதியில் ஒரு இயந்திரமும் வைத்து மின்சாரம் வழங்கப் படுகின்றது. இவ் மின் விநியோகம் ஏற்கனவே வழங்கப்பட்ட பகுதிகள் அனைத்திற்கும் கிடைக்குமென இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (கு)

## தொழிற்பயிற்சி...

அலுவலகத்தில் இருந்த போது அங்கு வந்தஇனந்தெரியாத இரு நபர்கள் இத்துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ள னர்.காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி அமைச்சு டக்ளஸ் தேவானந்தாவின் பொறுப்பிலுள்ளமை தெரிந்ததே.

## தற்காலிக...

மக்களுக்கு வழங்கப்பட்ட மீன் பிடிப்படகுகள் உட்பட மீன்பிடி உப கரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். இதனையடுத்து வடமராட்சி கிழக்கிலுள்ள பல்வேறு இடங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட இடைக்காலக் குடியிருப்புக்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். இதன்போது துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பிரிவினர், தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊடகப்பிரிவினர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் எனப் பலர் பிரசன்னமாகியிருந்தனர்.

## வவுனியாவில்...

சமாதான முன்னெடுப்பு விரைவு படுத்தப்பட வேண்டும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் பணியில் ஈடுபடும் விடுதலைப்புலிப் போராளிகள் மீதான தாக்குதல்கள், நிழல் யுத்தம் நிறுத்தப்படவேண்டும், இடைக்கால சபையை அரசு ஏற்படுத்தவேண்டும், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்ட வேண்டும்.ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இப்பேரணி நடைபெற உள்ளது. நகரத்தின் இயல்பு நிலையைக்குழப்பாத வகையில் நடை பெறவுள்ள இந்தப் பேரணிக்குப் பொறுப்பாக வன்னி மாவட்ட கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற் படுவார்கள்.

## மங்கள...

முரண்நிலை இருப்பதாகக் கூறியே இந்தக் குழுவை சந்திரிகா நியமித்தார். சந்திரிகாவின் இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே அமுனுகமவிடம் லேக்ஹவுஸ் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த சனிக்கிழமையன்று கண்டியில் ஊடக வியலாளர்களிடம் பேசிய அமுனுகம, லேக் ஹவுஸ் நிர்வாகப் பொறுப்பு எதிர்வரும் வியாழக்கிழமை முதல் தம்மிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும், இது குறித்த சிறப் பாணையை சனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இது குறித்து சில ஊடகவியலாளர்கள் அவரிடம் விளக்கம் கேட்ட போது, லேக்ஹவுஸ் நிர்வாகம் முழுமையும் எனது பொறுப்பிற்குவராது எனவும், ஆனால் வாராந்திர ஊடக மாநாட்டைத் தானே நடத்தவுள்ளதாகவும் கூறினார்.

## கடற்றொழில்...

உற்பத்தி நிறுவனமான மறையன்மல்றி சேவிஸ் எனும் நிறுவனத்தினரால்தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியில் தயாரிக்கப்பட்டதாகும்.

இப்படகு, வலைகள் கையளிப்பு நிகழ்வு வடமராட்சி கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள படகு உற்பத்தி நிலையத்தில்காலை பத்து மணியளவில் இடம்பெற்றது. வடமராட்சி கிழக்கில் தொழில் உபகரணங்களை இழந்த மக்கள் மீண்டும்தொழிலைஆரம்பிப்பதற்கு தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தினரால் முதல்கட்டமாக வழங்கப்பட்ட இப்படகுகள், மீனவர்கள் மீண்டும் தொழிலை ஆரம்பிக்க ஏதுவாக அமையுமென தெரிவிக்கப்படுகிறது. இப்படகுக் கையளிப்பு நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச்சுடரினை சமூகபொருளாதார அபிவிருத்தி வங்கி மேலாளர் சிறிஸ்கந்தராசாவும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுசங்கங்களின் சமாச மேலாளர் காதரும் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ கடற்படைத்தளபதிமங்களேஸ் ஏற்றிவைத்தார், தொடர்ந்து மங்கல விளக்கினை வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் தியாகராசாவும் கிராமசேவகர் நடராசாவும் ஏற்றிவைத்தனர்,. தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊடகப்பிரிவைச் சேர்ந்தவேலணையூர் சுரேசின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்த தொடர்ந்து தமிழீழ கடற்படையின் வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப்பொறுப்பாளர் நிலவன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த வின்சன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து படகுகளை தமிழீழ கடற்படையின் யாழ்.மாவட்டத்தளபதி சலீம் எம்.எம்.எஸ் நிறுவன பணிப்பாளர் லோகநாதன், தமிழர் புனர்வாழ்வுக்கழக கொழும்பு பிரதிநிதி தசன் நோர்வே பிரதிநிதி கிறிஸ்ரின் லூண்டன் மற்றும் வித்தியா பெரேரா ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில்அரச அரசசார்பற்ற நிறுவனபிரதிநிதிகள்,- போராளிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச,தீ)

## நிரந்தர...

முன்பாக இருந்து ஆரம்பமான இவ் ஆர்ப்பாட்டப் பேரணியானது புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியசாலைக்குச் சென்றது.இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆதரவாக மாணவர்கள், ஆசிரியர்கள்,அதிபர்கள், நலன்விரும்பிகள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது கலந்துகொண்டனர். இவர்கள் அரசுக்கு எதிரான பல கோசங்களை எழுப்பிச் சென்றனர். சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் முல்லை வலயத் தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் வி. சிறிதரன் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

முல்லை வலய அதிபர் சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியேஸ்வரன், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க முல்லைக் கிளை செயலாளர் இ. செல்வநாயகம், முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

இதனை அடுத்து மகஜர்கள் வாசிக்கப்பட்டு மாகாணக் கல்வி அமைச்சுக்கான மகஜரை முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் ப. அரியரத்தினம் அவர்களிடம் தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் கையளித்தார். மகஜரைப் பெற்றுக்கொண்ட கல்விப்பணிப்பாளர் பதிலுரையும் ஆற்றினார்.

தொடர்ந்து சிறிலங்கா சனாதிபதிக்கான மகஜர் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் சி.வேதவனம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. மகஜரைப்பெற்றுக்கொண்ட அவர் பதிலுரையாற்றினார். இதனையடுத்து வடக்கு கிழக்கு மாகாண ஆளுநருக்கான மகஜரைப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ. தயானந்தாவிடம் கையளிக்கப்பட்டது. மகஜரைப் பெற்றுக்கொண்ட அவர் பதிலுரையாற்றினார்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அதிகாரிகள் தொண்டர் ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டியதுடன், யுத்தகாலத்திலும் சரி, தற்போதும் சரி அவர்களின் சேவை தேவையாகவேயுள்ளது. அவர்களின் சேவையால் கிளிநொச்சி வலயத்திலும் முல்லை வலயத்திலும், மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதென புகழாரம் சூட்டினர். தாம் பெற்றுக்கொண்ட மகஜரை உரியவர்களுக்கு உரிய முறையில் அனுப்பி வைப்பதாக உறுதியளித்தனர். (08)


## பணிநிலை வேண்டுகை

ஈழநாதம் பத்திரிகை நிறுவனத்திற்கு ஒப்புநோக்குநர், ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-** ஒப்புநோக்குநர்

**அகவை :-** 25இற்கு மேற்பட்டோராக இருத்தல் வேண்டும் (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**கல்வித்தகைமை :-** க.பொ.த (உ/த) பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் சித்தியடைந்தவர்களாயிருத்தல் வேண்டும். அல்லது ஓய்வு பெற்ற அலுவலர்கள் அல்லது அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.

**ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் :-**
முன் அனுபவமும் அரசியல் குறித்த துறைசார்ந்த அறிவும் உடையோர் விரும்பத்தக்கது.

குறிப்பு:- உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்
வேதனம:- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தகுதியுடையவர்கள் 06.04.2005(புதன்கிழமை)காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனைக்குச் சமூகம் தரவும்

நிர்வாகம்

## காணி விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தில் சிவநகர் பகுதியில் புதுக்குடி யிருப்பு வைத்தியசாலைக்கும், உதவி அரசாங்க பணிமனைக்கும் மிக அருகில் உள்ள க. சுந்தரலிங்கம் ஆகிய எனது அரை ஏக்கர் காணி விற்பனைக்குண்டு விலைநேரில் பேசித் தீர்மானிக்கலாம். (தென்னம்பிள்ளைக்காணி)

தொடர்புக்கு:-
சுந்தரலிங்கம்
7ஆம் வட்டாரம்,
சிவநகர், புதுக்குடியிருப்பு. (சி-11621)

ஆ.ஜெயசீலன்
ப.நோ.கூ. சங்கம்,
புதுக்குடியிருப்பு.

## மாபெரும் விளையாட்டுப் போட்டி - 2005

புதுவருடத்தை முன்னிட்டு வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகம் வருடம் தோறும் நடாத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டி

போட்டிகள் :-
- மரதன்ஓட்டம் ஆண்கள்
- மாட்டு வண்டிச்சவாரி
- உழவுஇயந்திரப்பெட்டி கொழுவுதல்

காலம்: 14.04.2005 புதுவருடத்தன்று.
நேரம்: மரதன் காலை 6.00 மணி ,ஏனையவை பி.ப. 2 மணி
இடம்: நந்திக்கடல் வெளி.

வன்னிநிலப்பரப்பில் உள்ள அனைத்துப் போட்டியாளரும் பங்குபெறலாம்.
விண்ணப்பமுடிவுத்திகதி 13.04.2005

பதிவு செய்யும் இடம்
பூங்கண்ணன் தேநீர்ச்சாலை வற்றாப்பளை (சி-11600)
மங்களேஸ்வரா வற்றாப்பளை.

## கூல் லெமனேற்றிங்

A4 சைஸ் 1/= மட்டுமே

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
183,பலாலி வீதி, கோண்டாவில்.
T.P.222 6722

## பொலிமர் றபர் ஸ்டாம்

உங்களிற்குத் தேவையான றபர் முத்திரைகளை செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
183,பலாலி வீதி, கோண்டாவில்.
T.P. 222 6722
(சி.11482)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**செபஸ்தியான் பிள்ளை – இராசதுரை**
**(ஞானம்ஸ் முன்னைநாள் உரிமையாளர்)**

கிளிநொச்சி மடுத்தாய், பூநகரி தெய்வத்தாய் களஞ்சிய உரிமையாளர்களின் தந்தையாரின் திடீர்மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

வர்த்தகர் சங்கம்
பூநகரி
(5966)

## சாவு அறிவித்தல்

# முருகேசு மகாதேவன்

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஸ்கந்தபுரம் இல.257 இல் வசித்தவருமான முருகேசு மகாதேவன் (04.04.2005) நேற்றுச் சாவடைந்து விட்டார். அன்னார் காலஞ் சென்றவர்களான முருகேசு -விக்கினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மகனும் சௌந்தராம்பிகையின் அன்புக் கணவரும் விமலாதேவியின் அன்புச் சகோதரரும், சண்முகநாதனின் மைத்துனரும், உமாதேவி (கரைச்சி பிரதேசசபை), பாஸ்கரன் (போராளி), பிரபாகரன் (வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனம்), அரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரதாஸின் (நிதர்சனம்) மாமனாரும், தருண், யதிரா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல: 257 ஸ்கந்தபுரத்தில் அவரது இல்லத்தில் (05.04.2005) இன்று நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை ஸ்கந்தபுரம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்க.

தகவல்:-
மக்கள், மருமக்கள்
(5970)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ஆம் திக்தி அச்சிட்டு வெளியிடப்பட்டது